தொண்டன்

V. 6 No. 5 2 Feb 1933

JL
ffl211, N28KN
N33.6.5
189138

KALANILAYAM தனிப்பிரதி விலை அணா மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6.] 1933 ஹ பிப்ரவரி மீ 2உ [No. 5

12 APR 1933

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 81
2. தேவகி (ஓர் நாவல்)
K. இராஜகோபாலன் 83
3. கலித்தொகை (பாலைக்கலி 3.)
T. A. கனகசபாபதி முதலியார் 84
4. நம்மாழ்வார் வைபவம் (4-ம் பத்து, 5-ம் தசகம்)
K. இராஜகோபாலாசாரியார் B.A.B.L. 85
5. தமிழ்ப்பாடம்
(நளவெண்பா - கலிநீங்குகாண்டம்) 86
6. அப்பர் (64 கலை - வியாகரணம்)
E. N. தணிகாசல முதலியார் B A B.L. 88
7. காற்று மழை (அங்கம் 1. களம் 2)
(Shakespeare's Tempest) 90
8. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 91
9. பொதிகை நிகண்டு (இகராதி)
S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L. 93
10. யாப்பிலக்கணம்—தொடை
வித்துவான் M. V. வேணுகோபாலப்பிள்ளை 94
11. அலங்கோல வெண்பா
T. சுப்பராய செட்டியார் 96
12. வர்த்தமானம் 99

கலாநிலயம்

189138

சொன்னால் விரோதம் 4.

சொன்னால் விரோதமாவன இன்னுந்தான் எத்தனையோ உள. "மற்றவெல்லாங் கிடக்க, முதலில், நான் உயிரோடிருப்பதற்கு வேண்டியவைகளைத் தேடிக் கொள்வது இன்றியமையாததன்றோ" என்பார் எங்கெங்கும். இன்னவனொருவனை அணுகி, "நண்ப, முதலில் நீ உயிரோடிருக்கவேண்டுவது எவ்வகையில் இன்றியமையாததாயிருக்கின்றதென்பதைஎனக்குச் சற்றே சிந்தித்துச் சொல். அப்புறம், உயிரோடிருப்பதற்கு வேண்டியன யாவை என்பதைப் பற்றியும், அவைகளை அடையும் வழி எது என்பதைப் பற்றியும் ஆராய்வோம்" என்று சிவத்தியானுநந்தரைப் போல் கேட்டக்கால், அவன் விரோதம் பாராட்டத் தலைப்படாதிருத்தல் மிக அருமை. "மனிதனுடைய பிறப்புரிமை இவையிவை அல்லவோ?" என்று கேட்கின்றார் பலர். "ஆம், நண்ப, நீ மனிதன் என்பதற்கு இன்னும் சாக்ஷிகள் கொண்டுவரவில்லையே. விலங்குகளும் நம்மைத் தம் மினத்திற் சேர்த்துக்கொள்ள வெட்கப்படுமே" என்று ஜான் கூபர் பாவிஸ் என்னும் அமெரிக்க அறிஞர் கூறக் கேட்பவர் பகையே கொள்வார். கந்தபுராணத்தில் வந்துள்ள முசுகுந்தன் என்னும் அக்குரங்கு மனிதனாய்ப்பிறக்க இசையாமல் பரமசிவனுடன் மன்றாடியதென்றால், மனிதரென்று தம்மை வியந்துகொண்டு உரிமைகள் கேட்கவருவோரையும் அதனை மறத்துப் போவோரையும் எவ்வாறு மதித்துரைக்க வேண்டுமென்பது வெளிப்படை. "கல்வி கல்வி என்று கழறித்திரிவதினின்றே நீங்கள் கற்றவர்களாகமாட்டீர். அரியநூல்களைக் கற்றாய்ந்த பின்னரே கல்வியுடையவராவீர். அதன்முன், கல்லாத மாந்தர்காள் நீங்கள் கோட்டிகொள்ளாதீர், கொள்வீராயின், நும்மையுங் கெடுத்துக்கொண்டு மற்றவர்களையும் கெடுப்பவர்களாவீர்" என்று அறைவோர் பெரும் பகையைத் தேடிக்கொண்டவர்களாவார். "வர்த்தமானப் பத்திரிகைகளைப் படிக்கின்ற அவ்வீண்வழக்கத்தை ஒழிப்பீர்களாயின், எத்தனையோ நன்மைகள் உங்களுக்கு வாய்க்குமே. இது கூறினால் விரோதம் விளையும். அஞ்சி இதனுடன் நிறுத்துகின்றேன்" என்று எமர்ஸன் போன்றவொரு புகழ்வாய்ந்த பேரறிவாளரே கூசுகின்றாரென்றால், வேறென்ன விளம்பவேண்டும்.

ஆயினும், சொன்னால் விரோதம் இவை யிவை என்று சொல்லால் முழக்கிக்கொண்டிருப்பதிற் சுகமில்லை. விரோதமானவைகளைச் சொல்வதோடு நிற்பதால் எஞ்சுகின்ற வீரத்தால் விளையவல்ல பயனொன்றும் பெரிது காண்கிலம். சிலர் விரும்பலாம், சிலர் நகைக்கலாம், சிலர் பகைக்கலாம். வியப்பும் விருப்பும் விரோதமும் விடாநகையும் வாழ்க்கையோ ஆகமாட்டா. கலங்கலில்லாக் காட்சியன்றோ மனிதர்க்குவேண்டும். கண்ணாற் காண்பனவெல்லாம் காட்சிகளாகா. தோற்றத்திற்கும் காட்சிக்கும் இடையே நெடுந்தூரங் கிடக்கின்றது. கண்பெரிது மதிசிறிது எனின் தோற்றங்களையே நம் வாழ்க்கை தொத்திக்கொள்ளும். இவ்வாறன்றி, கண்டனவெல்லாம் ஒரு கடவுளின் மோன உருவெளியாகக் கருதித் தாயுமானவருடன் அஞ்சலி செய்யவல்ல மதியின் பயிற்சி வாய்க்குமா

யின், பிறகு விரோதமானவைகளைச் சொல்லவேண்டா; சொன்னாலும் அது விரோதமாகாது.

இனி, கண்டன வெல்லாம் கடவுளின் மோன உருவெளியாகக் கருதற்கிசைந்த பயிற்சியைத் தருதற்குரிய தத்துவம் அழகென்னும் அஃதொன்றே. மீண்டும், அவ்வழகின் தத்துவத்திற்கு நம்மை ஆளாக்கும் செவ்வியுடைய பெருமை கலைகளிலேயே உளது. இவ்விடயத்தைப்பற்றி ஜேமஸ். எச். கஸ்லின்ஸ் (James H. Cousins. D. Litt) என்பவர் பேசியுள சில வாசகங்கள், இங்குப் பெரிதும் பாராட்டத்தக்கன.

But while I propose to apply the philosophy of Theosophy to the elucidation of the nature of Beauty and its expression in the Arts, I propose to do so in the order of the spectrum projected by the prism of a poem of eight lines by Dr. Robert Bridges, the present English Poet-Laureate. In doing so I shall but follow the immemorial commentary habit of the East, and at the same time I trust that the subject may prove provocative of thought to the West. The lines are:

> I love all beauteous things
> I seek and adore them;
> God hath no better praise,
> And man in his hasty days
> Is honoured for them.
>
> I too will something make
> And joy in the making;
> Although to-morrow it seem
> Like the empty words of a dream
> Remembered on waking.

This little poem is regarded as an admirable expression of the impulse towards the admiration and creation of beautiful things. The poet does not express any favouritism in regard to objects of beauty. It is not impossible that there may exist objects esteemed as beautiful, outside the confines of the Greek tradition, that would not be regarded as beautiful by the poet: and this is one of the problems of a wider philosophy of beauty than that which leaves out the vast world of oriental art,—the reconciliation of different standards of taste. But taking the poem as it is, we note first that the only qualification that the poet imposes on "things," if they would win his admiration, is that they shall be "beauteous."

What is this quality of beauty which is so powerful that it draws a Christian poet into pagan worship of mere inanimate things? Is it a sentimentality based on certain associations of colour and form, texture and odour, which, because of their usefulness to humanity have given pleasure? Emerson has spoken of Beauty as that out of which God created the world. To him beauty is the original characteristic of the universe. Sir William Watson has chanted of beauty as

> ... the vision whereunto
> In joy, with pantings from afar,
> In sound and odour, form and hue
> In mind and clay, and worm and star
> Now reaching goal, now backward hurled
> Toils the indomitable word.

To him beauty is the goal of evolution.

According to Theosophical conception, the universe of which we are cognisant is a manifestation of the Universal Being. That Being assumes a triple aspect involving (1) a creative impulse, (2) a cohesive principle among the nominally separate members of the created universe, and (3) a principle of change from stage to stage from the synthetic level of the Cosmic Being to the most concrete state of matter within the universe and back again. This process recognised intuitively by the seers of old and personalised in the Hindu Tirumurti (Brahma, Vishnu, Shiva) has been in our day intellectually apprehended as the laws of evolution. But behind the evolutionary phase of the cosmic process is a phase of involution, by which the finer elements of the Cosmic Being became so to speak the extensive spiritual nuclei (not the sex-nuclei of modern psycho-analysis) within every conceivable atom of the cosmic stuff. To use the terminology of theosophy, a vast impulse from the triple logos, called the first life-wave, prepared the substance of the universe to be. A second wave, sending a thrill of organisation into the diffused universal substance slowly developed the varied and multifarious forms of the several kingdoms of the universe. Through this interaction of substance and from the Cosmic Being expressed itself; "the one spirit's plastic stress," as Shelley calls it, disclosed itself in varying degrees through the disguises of its own self-limitation. But there came, in the process of Aeonian evolution, a point at which the atomised Universal Being aggregated itself into an instrument capable of response not only to the push of the first and second life-waves but to the call of the third life-wave which carried the phosphorescent glow of consciousness through the great deep of creation. The long history symbolically spoken of in the Bible as the making of the physical form of man out of the dust of the earth culminated in the influx of consciousness from the third life-wave, figured in the phrase. ,' And God breathed into his nostrils the breath of life, and man became a living soul.

. . . . . The relationship between the Cosmic Being in its totality and in the details of its self-analysis is not one of parallelism out of identity. The realisation of the identity and action accordingly is the source of joy and the strait gate to human happiness, the one source of human misery is thought and action against that identity. The joy of the whole is in the identification of itself with its own variety, the joy of the unit is in the identification of itself with the totality.

அழகே பரந்து இப் பிரபஞ்சமாயிற்றெனின், அவ்வழகிற் பயில்வதற்கு நம் உள்ளத்தை வணக்காத வரையில் உய்ந்து கரையேற வழியில்லை. கலையெனுந் தீம்பாற் கடலினை உணர்வெனும் மந்தரகிரியினாற் கடையத் திரண்டெழும் அமுதம் அவ்வழகு. இந்த நினைவு இல்லாதார் இருந்து செய்யற் கொன்றுமில்லை. அப்படியிருந்து செய்வன வெல்லாம் சோகத்தையே சூழ்ந்தன வாகிவிடும். இதனை உரைக்குங்கால் விரோதங் கொள்வதால் விளையும் பயன் என்? கல்லாத மாந்தருக்குக் கற்றறிந்தார் சொற் கூற்றமாவது மூதுரை யாதலின், இதனில் புதிய தொன்றுமில்லை. ஆயினும், அமுதினை நஞ்செனா அஞ்சுவதோ என ஏங்கும் எம் நெஞ்சு.

தேவகி

அத்தியாயம் 3.

[66-வது பக்கத் தொடர்ச்சி]

மாதமிரண்டு சென்றும் என் மாமனுக்குச் சுரம் காய்வதும் அடங்குவதுமா யிருந்ததேயல்லாமல், நின்றபாடில்லை. உடல் நிலையில் குணத்திற்குரிய குறியொன்றும் வைத்தியர்களுக்கேனும் மற்றவர்களுக்கேனும்தென்பட்டிலதுகுமுதத்தின் தந்தையொடு வேறுசிலரும் பரிவுடன் வைத்தியம் புரிந்துவந்தனர். அவர் செய்த முயற்சிக்குரியபடி பயனொன்றும் ஏற்படவில்லை.இந்நிலையில் என் மாமன் என்னை அடிக்கடி கட்டியணைத்துக் கண்ணீர் உகுப்பார். அவர் உகுத்த கண்ணீரின் காரணமோ அப்பொழுதெனக்குவிளங்கவில்லை. 'அம்மா,உனக்குநற்காலம் வராமற்போகாது, நீ வருந்தேல்,'' என்பார் ஒரு வேளை. "எனக்குப் பின் சிறுமி நீ என்ன செய்வாய், எங்குச் செல்வாய்' என்று தேம்புவார் மறுவேளை. 'வஞ்சனையே நிரந்தர தர்மமாகிய இவ்வுலகில் விரகறியா என் செல்வமே உன்னைக் காக்கின்ற புண்ணியத்தை யார் ஏற்பார்' என்று ஏங்குவார் ஒருபோது. 'நற்காலம் வந்தெய்தும் காலம்வரை என் மனைவிட்டு நீ அகலாதிருக்க வேண்டும்' என்று என்னை வேண்டுவார் மறுபோது. நாள் செல்லச்செல்ல நோயின் கொடுமையே வலிவுற்று வளர்ந்தது. கஞ்சியும் செல்லவில்லை. வயித்தியர்களும் சலிப்படைந்தனர். கபமும் வன்மையுடன் அவர் தொண்டையைப் பற்றிக்கொண்டது. அப்பொழுதுதான், அவர் கண்ணழுது கூறிய வாசகங்களின் உட்கருத்தை அறியலானேன். அறிந்த நான் அழுவதல்லால் செய்வதற்கு வேறு என்னுளது; அழுதேன். 'என்மீது அன்பு கொண்டார் எல்லோரும் துன்பத்தின் வாய்ப்பட வேண்டுமென்பது கடவுளின் திருவுளமோ, பாவி நான் மண்ணிற்பிறந்த நேரத்தின் பயனோ, நானறியேன். இன்னபடி ஏங்கினளாய் மாமன் திருமார்பில் தலைவைத்துச் சாய்ந்துகொண்டேன். என் கண்களோ நீரைப்பெருக்கி அவர் மார்பினில் அருவியிட அவர் அலமந்து என்னை யுற்றுநோக்கி, 'அடி, என் செல்வமே, என் உள்ளத்தைக் கோயில் கொண்ட ஒரு கடவுளே, என்னுருயிர்த் தேவகி, ஏன் அழுகின்றாய்'' என்று சொல்லி என் வாய்பார்க்க, 'பெருந்தகை மாமாவோ, வல்வினையேன் பாவி என்னை உய்விக்க வந்த ஒரு பெருமானே, தாயானாய், தந்தையுமானாய். உன்னை இழக்க விருக்கும் எனக்கு இனி அழவும் வேண்டுமோ' என்று உரை குழற எதிருரைத்து என் கண்களைத் திருத்திக்கொண்டேன்.

"நான் இனிப் பிழைக்கமாட்டேன் என்று கரைகின்றாய். அம்மா, நீ வருந்தேல். உன்னைவிட்டுப் பிரிவதற்கு மனமில்லை. ஆனாலும், அல்லலே வாழ்வின் உறுதியெனக் கொண்டு சுழலும் இப் பேதையுலகை விட்டுச்செல்லுதல்சீரியதேயாகும். பிறப்பதும் இறப்பதற்கன்றோ. வந்தவர் தம்வினைகளைத் தொலைத்துவிட்டு இருந்தவிடம் மீண்டும் செல்ல வேண்டாவோ: போதுமடி பெண்ணே, பிறந்ததால் நான் பெற்ற பேறு. பொல்லா வேளையில் உன் மாமிக்குத் தாலிகட்டி, மனைப்பேறும் மக்கட்பேறும் அடைந்துவிட்டேன். இனியிருந்து பெறுவதற்கு ஒன்றுமில்லை. நான் சாகவே விழைகின்றேன்...'' என்ற உரை முடியுமுன்னர் என்னை யிறுகப் புல்லினராய்ச் சின்னேரம் இருந்து பின் கலங்கிய கண்ணுடன், 'என் செல்வமே, என் பணமுண்டு, அவளுமுளள். என் மக்களைப் பற்றிய கவலையொன்றும் எனக்கில்லை. அவள் வழிவந்த கிளையைக் காத்திடுவாள். ஆயினும், என்னை இரைகொண்டு தின்பதெல்லாம், எனக்குப் பின் உன்நிலை என்னும் என்னுமொரு வியாகூலமே, அம்ம,' என்றுசொல்லி ஆக்கை தளர்ந்து அலமந்து சோர்ந்து போனார்.அவர் உற்ற சோர்வு தெளிவதற்குரியனசெய்து, விசிறியால் வீசிக்கொண்டிருந்தேன். சின்னேரம்சென்றதும் கண் விழித்தார். கண் விழித்த என் மாமன் என்னை மார் போடணைத்துக்கொண்டு 'என் இளமயிலே, என்னுயிரனையாய், சிறுதலைப் பெருவயிற்றுக் கரியபூதக்கொடும்பாவி உள்ளிருக்கின்றாளா?' என்றுகேட்டார்.மனையினுட்சென்று பார்த்தேன், திகைத்துப் போனேன். கணவன் உற்றுள நிலையும் மதியாமல் வெளிச்செல்வதற்குத் தன்னை அலங்கரித்துக்கொண்டிருந்தாள் அவள்.அப்பொழுதுதான் குடந்தைமாதர் கூட்டம் அன்றைக்கென்னும் ஞாபகம் எனக்கு வந்தது. ஆம், அக்கூட்டத்தில் மாமி செய்யவேண்டியன பலவுண்டு. பொதுநலச்சேவையின்முன் கணவன் எம்மாத்திரம். இப்பெருமை பெரியதே. கூட்டத்தில் என் மாமி பெறப்போகும் புகழுரை அப்பொழுதே அவள் செவியில் ஓலமிடுகின்றது. அணிவதற்கான உடையை அவசரத்தில் தேர்ந்தெடுத்தாள். காலம் நடக்கின்ற விரைவினைக் கடிகின்ற சினத்தில் ஆடையை அணிந்துகொண்டாள். மகனையும் மகளையும் உடனழைத்துக் கொண்டு புறக்கடைவழியாய் வெளிச்சென்றாள்.மாமனிடம்வந்து 'ஐய, நின் மனைக்கிழத்தி தன்னுடைய மக்களுடன் உலகத்துப் பெண்பாலார் நலம்பேணச் சென்றுவிட்டாள்,' என்றேன். 'சென்றனளா, குடந்தைக்குக் கொள்ளிசூழச் சென்றனளா? செல்லட்டும்; அதுவும் நன்றே ஆயது,'' என்று கூறி எழுந்து உட்கார்ந்துகொண்டு என்னை வாரியெடுத்து மடிமீது இருத்திக்கொண்டார். உள்ளத்தோ டுள்ளம் ஒன்றியுறவாடுங்காலை வாய்ப்பேச்சிற்கு இடமுமுண்டோ! இருவேமும் இவ்வுலகப் புன்மையெலாம் துறந்தனராய் மோனத்தில் ஆழ்ந்துவிட்டோம்.

பரிவுடன் வயித்தியங்கள் செய்துவரும் என்தோழி குமுதத்தின் தந்தை வந்த அரவம் எம்மோனத்தைக் கலைக்க நாங்கள் இருவரும் கண்விழித்தோம்.வந்தவர் சோதனை செய்துவிட்டு மீண்டும் இரவு வருவதாகச் சொல்லிச் சென்றார். வயித்தியர் முகமும் அவர் தந்த உரையும் என்னுள்ளத்தில் அச்சத்தையே மூட்டி வைத்தன. கலங்கினேன். என் மாமனோ அசாதாரணமான அமைதியோடு விளங்கினார். என்னை அவர் நோக்கி மெல்லிய குரலில், 'அம்மா, இனி நான் உயிர் வாழமுடியாது. சாவின் குறிகளெல்லாம் என் கண் முன் வருகின்றன. இனி நான் உயிர் வாழவும் விரும்பவில்லை. இந்தா, இக் கடிதத்தைப் பார். கடவுளே உன்னைக்காக்கவேண்டும்' என்றுகூறி ஒரு கடிதத்தை என்னிடம் கொடுத்துப் படுக்கையின்மீது சாய்ந்துவிட்டார். கடிதத்தைப் படித்தேன்:—

"ஐய பெரியீர்,

வாழி வாழி நின்குலம், வாழி நின்கிளை. என் முன்னவன் பயந்த பொன்னைப் பரிவுடன் புரக்கும்கோவே, வாழி, வாழிநின் மலரடி. என் காதற் சிறுமி எப்படி யிருக்கின்றாள். விடை யெனக்கு உடனருள்வீர்.

"ஐயா, கடன்பட்டேன், இனியும் உமது பெருமையால் என்னைக் கடன்கொள்வீர். என் முன்னவன் பெற்றெடுத்த கொம்மை, என்னுருயிரின் வைப்பை உம்மிடம் ஒப்படைக்கின்றேன், வள்ளலே ஏற்பீர். நான் வட்டியுடன் கடன்செலுத்தும் காலம்வரை அவளைக் காத்தருள்வீர்.

"பண்டை நினைவெல்லாம் என்னைச் சுட்டழிக்கின்றன. வேறு யாரிடம் சென்று உரைசெய்து ஆறுதல் பெறுவேன். எனவே இப்பொழுது உரைக்கின்றேன், கேட்டருள்வீர். இளமையின் வேகத்தால் மதியிழந்து என் அண்ணனுடன் மாறுகொண்ட மாசு தீர அவன் காதற்சிறுமியின்பால் என் கடனாற்றி வாழ்வதற்குரிய நாளை எதிர்நோக்கி நிற்கின்றேன். என் முன்னவனுக்கு நான் இழைத்ததீங்கோ சிறியதன்று. இதை நான் நினைக்குங்கால் என் மெய்யே கரைகின்றது. சாகுந் தறுவாயில் என் பிழை பொறுத்து என்னைக் காணவே அவன் விழைந்த பெருமையை உன்னுங்கால் என் உள்ளம் துடிக்கின்றது.

"தூயவன் என் அண்ணன் வருந்தியழைத்தும் வாராதிருந்த என் கன்னெஞ்சை உலையிலிட்டெரிக்கவேண்டாவோ. வாள்கொண்டு என் மெய்யளைந்து சுண்ணும்புக் காளவாயில் இடுவதும் எனக்குப் போதிய தண்டனை யாகுமோ!"

"வெட்கமில்லாமல் இன்னும் நான் உயிர்தாங்கியிருக்கின்றேன்; என்செய்வேன். பெரிது, பெரிது, என்பாவம் கடலினும் மிகப்பெரிது. அண்ணனைத் துறந்தேன், அவனொரு மகவைக் காக்கின்ற கடனையும் மறந்தேன். பாவம் பெரிதுடைய வன்னெஞ்சப் பாவியென்பால் வந்தெய்தக் காலனும் அஞ்சுகின்றான். எனவே, என் செய்வேன், வாழ்கின்றேன்."

ஆம், வாழ்கின்றேன், வாழாது தீராது; வாழத்தான் போகின்றேன். என் அருந்தவச்சிறுமி தேவகியின்பால் கடனிறுக்க வேண்டாவோ. அவள் நகை தவழும் முகங்காட்டும்போழுதும், மென்னடையும் நன்மொழியும், என் உள்ளத்து இருள்துடைக்க வேண்டாவோ. வந்திடுவேன் விரைவினிலே. என் செல்விதரும் நலத்தினால் என்பாவமெலாம் துடைத்தகற்றும் பேறுபெற வந்திடுவேன். நான் வருந்தனையும் உம்பால் ஒப்படைத்த அடைக்கலப் பொருளை வைத்தளிப்பீர். இதுபொழுது என் னுறைவிடம் சிங்கப்பூர்.

ஐயா, நின் சேவடிதொழும் எளியன்.

தில்லையம்பலம்."

கடிதத்தைப் படித்தேன். திரும்பவும் திரும்பவும் படித்தேன். படித்தவக் கடிதமோ என்பால் மனமற்றவோர் நிலையை இயற்றிவைத்தது. மருளமருள விழித்தேனே யல்லாது என் வாய்பார்த்துக்கொண்டிருந்த மாமனுக்கு ஒருசொல்லும் இல்லாது போயிற்று. என் சொல்வது, என் செய்வது, என்றெனக்குத் தெரியவில்லை. திகைத்தவளாய் அமர்ந்திருந்தேன்.

கலித்தொகை

[50-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைக்கலி - 3.

'பொருள்தேடப் போகின்றேன்' என்று தலைவன் கூறக் கேட்ட தோழி, "நீர் கூடியிருந்தகாலத்தில் நடத்தியசெயல்களால் நுமது எண்ணத்தைத் தலைவி அறிந்து பெரிதும் வருந்துகின்றாள். பின்னும் நீர் பிரிவீரானால் அவள் இறந்தேவிடுவாள். ஆதலினால், நீர் பிரிகின்ற எண்ணத்தை நீக்கிவிடுவீராக" என்று கூறியதைக் கூறுவது இச் செய்யுள்.

வலிமுன்பின் வல்லென்ற யாக்கைப் புலிநோக்கிற்
சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தைய
ரற்றம்பார்த் தல்குங் கடுங்கண் மறவர்தாங்
கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வௌவலிற்
புள்ளும் வழங்காப் புலம்புகொ ளாரிடை
வெள்வேல் வலத்திர் பொருடரல் வேட்கையி
னுள்ளினி ரென்ப தறிந்தன ளென்றோழி!

காழ்விரி கவையார மீவரு மிளமுலை
போழ்திடைப் படாஅமல் முயங்கியு மமையாரென்
றாழ்கதுப் பணிகுவர் காதலர் மற்றவர்
சூழ்வதை யெவன்கொ லறியே னென்னும்!

முள்ளுறழ் முளையெயிற் றமிழ்தூறுந் தீநீரைக்
கள்ளினு மகிழ்செயு மெனவுரைத்து மமையாரென்
னொள்ளிழை திருத்துவர் காதலர் மற்றவ
ருள்ளுவ தெவன்கொ லறியே னென்னும்!

நுண்ணெழின் மாமைச் சுணங்கணி யாகந்தங்
கண்ணொடு தொடுத்தென நோக்கியு மமையாரென்
னொண்ணுத னீவுவர் காதலர் மற்றவ
ரெண்ணுவ தெவன்கொ லறியே னென்னும்!

எனவாங்கு

கழிபெரு நல்கலொன் றுடைத்தென வென்றோழி
யழிவொடு கலங்கிய வெவ்வத்த ளொருநாணீர்
பொழுதிடைப் படநீப்பின் வாழ்வாளோ
வொழிகினிப் பெருமநின் பொருட்பிணிச் செலவே!

(தரவு)

(வரி. 1-8) வலி முன்பின் - மிக்க பலத்தினால், வல் என்ற யாக்கை-உறுதியான உடம்பையும், புலிநோக்கின் - புலியின் தோற்றத்தினையும் கொண்ட, சுற்று அமை வில்லர் - சுற்றுக்கள் பொருந்திய வில்லையுடையவரும், சுரி வளர் பித்தையர் - கடை சுருண்டு வளர்ந்த மயிரினையுடையவருமாகிய, அற்றம் பார்த்து அல்கும் - சமயம் பார்த்து மறைந்திருக்கும், கடுங்கண் மறவர் - அஞ்சாமையையுடைய மறவர், தாம் கொள்ளும் பொருள் - தாம் அடைதற்கு ஏற்ற பொருளை, வம்பலர் இலர் ஆயினும் - வழிப்போக்கர் தம்மிடத்து இல்லாதவராயினும், துள்ளு

நர் காண்மார் - (அவர்) துடித்துச் சாகின்றவராதலைக் காணும் பொருட்டு, தொடர்ந்து உயிர் வௌவலின் - தொடர்ந்து போய் (அவர்) உயிரைக் கைக்கொள்ளுதலினால், புள்ளும் வழங்கா - பறவைகளும் சஞ்சரியாத, புலம்பு கொள் ஆர் இடை - வருத்தத்தைக் கொண்ட செல்வதற் கருமையாகிய வழியை, வெள் வேல் வலத்திர் - வெண்மையான வேலை வலக்கையில் உடையீராய், பொருள் தரல் வேட்கையின் - பொருள் சம்பாதிப்பதில் உள்ள ஆசையால், உள்ளினிர் என்பதை - நினைத்தீர் என்ற விஷயத்தை, என் தோழி அறிந்தனள் - என் தலைவி அறிந்து கொண்டாள்.

ஆரிடை உள்ளினிர் எனக் கூட்டுக. முன்பு - வலிமை. சுற்று - வில் அழகாகத் தோன்றுவதற்காகவும் உறுதியாக இருப்பதற்காகவும் அமைக்கப்படும் கட்டுக்கள்.

(தாழிசை)

(வரி. 9-12) காழ்விரி-முத்து வடங்கள் விரிந்த, கவை ஆரம் - (கழுத்து) அகத்திலிட்ட மாலையானது, மீவரும் இளமுலை - மேலே கிடந்த இளமையாகிய முலைகளை, போழ்து இடை படாஅமல் - (தழுவாத) காலம் சிறிதும் இடையிலே உண்டாகாமல், முயங்கியும்-தழுவியும், அமையார்-(அதனாலும் ஆசை) அடங்காதவராய், காதலர்- அன்புடையதலைவர், என் தாழ் கதுப்பு-எனது (அவிழ்ந்து) தொங்கிய கூந்தலை, அணிகுவர் - அழகாக முடிப்பார், மற்று - (அப்படிச் செய்கின்ற செயலால்) பின்பு, அவர் சூழ்வதை எவன் கொல் - அவர் நினைக்கின்ற காரியம் யாதோ, அறியேன் என்னும் - உணரேன் என்று கூறுவாள்.

சூழ்வதை - திரிசொல்

(வரி. 13-16) முள் உறழ் முளை - முள்ளை ஒத்த நாணல் முளையைப்போன்ற, எயிற்று அமிழ்து ஊறும் - பற்களில் இருந்து அமிர்தம்போலச் சுரக்கின்ற, தீ நீரை - இனிய (உமிழ்) நீரை, கள்ளினும் மகிழ்செய்யும் - கள்ளைக்காட்டிலும் இன்பத்தைக் கொடுக்கும் என உரைத்தும்-என்று கூறியும், அமையார் - (அதனால் ஆசை) அடங்காதவராய், காதலர் - அன்புடைய தலைவர், என் ஒள் இழை-எனது பிரகாசம் பொருந்திய ஆபரணங்களை, திருத்துவர்-(புணர்ச்சியால் குலைந்த நிலைமையிலிருந்து மாற்றி) அமைப்பர், மற்று-(ஆகையால்) பின்பு, அவர் உள்ளுவது எவன் கொல்- அவர் நினைக்கின்ற காரியம் யாதோ, அறியேன் என்னும்- உணரேன் என்று கூறுவாள்.

(வரி. 17-20) நுண்எழில் - நுட்பமான அழகினையும், மாமை (மாந்தளிர் போன்ற) நிறத்தினையும் கொண்ட, சுணங்கு அணி ஆகம் - தேமலை அலங்காரமாகப்பெற்ற என் முலைகள், தம் கண்ணொடு தொடுத்தென - தம் கண்களோடு கட்டி இருத்தலைப்போன்று, நோக்கியும் (அவற்றைக் கண்ணிமையாமல்) பார்த்தும், அமையார் - (ஆசை) தணியாதவராய், காதலர் - அன்புடைய தலைவர், என் ஒள் நுதல் - எனது ஒளி பொருந்திய நெற்றியை, நீவுவர்- (புணர்ச்சியால் உண்டாகிய வியர்வை நீங்கும்படி) துடைப்பர், மற்று - (ஆகையால்) பின்பு, அவர் எண்ணுவது எவன் கொல் - அவர் நினைக்கின்ற காரியம் யாதோ, அறியேன் என்னும் - உணரேன் என்று கூறுவாள்.

'தொடுத்தது என' என்பது 'தொடுத்தென' என விகாரமாயிற்று.

இம்மூன்று தாழிசைகளாலும் தலைவி கூறியவைகளைத் தோழி தலைவனுக்குக் கூறினாள்.

(தனிச்சொல்)

(வரி. 21) என - என்று அவள் கூறும்படியாக, ஆங்கு அசை.

(சுரிதகம்)

(வரி. 22-25) கழிபெரு நல்கல் (புணர்ச்சிக்குப் பின்பு நீர் காட்டிய) மிகப் பெரிய அன்பு, ஒன்று உடைத்து என- (பிரிவு என்னும்) ஒரு கருத்தை உடையது என்று, என் தோழி-எனது தலைவி, அழிவொடு கலங்கிய எவ்வத்தள்- நெஞ்சழிவால் கலங்கிய துன்பமுடையவளாய் இருக்கின்றாள்; ஒரு நாள் - ஒரு நாளினது, ஒரு பொழுது - ஒரு வேளை, நீர் இடைபட நீப்பின் - நீர் (கூடுதல்) நடுவில் விட்டுப்போகும்படி பிரிவீரானால், வாழ்வாளோ - தலைவி உயிரோடு இருப்பாளோ? பெரும - பெருமையுடைய தலைவனே, நின் பொருள் பிணி செலவு - நின்னுடைய பொருளாசையாகிய நோயால் செல்லுதலாகிய போக்கை, இனி ஒழிக - இப்பொழுது நீக்குவாயாக.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

4-ம் பத்து, 5-ம் தசகம்.

[68-வது பக்கத் தொடர்ச்சி]

4-ம் பாசுரம்.

மேவி நின்று தொழுவார்
  வினைபோக மேவும்பிரான்
தூவியம் புள்ளுடை யானட
  லாழியம் மான்றன்னை
நாவிய லாலிசை மாலைக
  ளேத்தி நண்ணப்பெற்றேன்
ஆவியென் னாவியை யானறியேன்
  செய்த வாற்றையே.

உரை:-மிக்க அழகான இறக்கைகளையுடைய கருட பகவானைத் தன் வாஹனமாகவும் திவ்விய சக்தியுள்ள சக்கிராயுதாழ்வானைப் படையாகவும் உடைய உபகாரகனை பிரபுவாகித் தன்னை அடிக்கும் பக்தர்களது ஸமஸ்த துக்கங்களையும் போக்கி அவர்களோடும் கலக்கும் சுபாவனுமிருக்கும் (ஆவி) ஸர்வாந்தர்யாமி, நான் இசைமாலைகளால் ஏத்தித் தன்னைக் கிட்டும்படி செய்திருக்கின்றான். என்னையும் ஒரு பொருளாகக் கருதி அவன் செய்த இந்த மஹோபகாரத்தை அளவிட்டறிந்து சொல்லமாட்டேன். என் ஆவியை என்ன செய்தானென்று எனக்கு ஒன்றும் புலப்படவில்லை.

5-ம் பாசுரம்.

ஆற்ற நல்ல வகைகாட்டு
  மம்மானை யமரர்தம்
ஏற்றை யெல்லாப் பொருளும்
  விரித்தானை யெம்மான்றன்னை
மாற்ற மாலை புனைந்தேத்தி
  நாளுமகிழ் வெய்தினேன்
காற்றின் முன்னங் கடுகிவினை
  நோய்கள் கரியவே.

உரை:—ஆற்ற - பக்தர்கள் தன் கல்யாண குணங்களில் ஒவ்வொன்றையும் அநுபவிக்க அநுபவிக்க மற்றொரு கல்யாண குணத்தை அவர்களுக்குக் கா

ட்டிக்காட்டித் தன் குணங்களில் அவர்கள் ஊன்றிக் களிக்கும்படி செய்கின்றவரும், எனக்கும் அமரர்களுக்கும் ஒக்க பிரபுவானவரும், அர்ஜுனனைவியாஜமாக வைத்து எனக்கும் மற்றெல்லா உலகங்களுக்கும் கீதா சாஸ்த்திரதத்தை விரித்து உதவினவரும் ஆகிய அவரை என் வாக்குக்கொண்டு தினம் இசைமாலைகள் பாடி மகிழ்ச்சி அடைந்தேன். என் பாவங்களும் துக்கங்களும் காற்றைவிட வேகமாய் ஓடி நசித்துப்போயின.

6-ம் பாசுரம்.

கரிய மேனிமிசை வெளிய
நீறு சிறிதேயிடும்
பெரிய கோலத் தடங்கண்ணன்
விண்ணோர் பெருமான்றன்னை
உரிய சொல்லா லிசைமாலை
களேத்தி யுள்ளப்பெற்றேற்
கரிய துண்டோ வெனக்கின்று
தொட்டு மினியொன்றமே

பொழிப்புரை:—தன் நீலமேக வர்ணமான திவ்விய ரூபத்துக்கு உசிதமாய் அலங்காரமாகும்படி குறைந்தவளவில் திவ்விய வெள்ளையான பச்சைக்கற்பூரப் பொடியைத் திருமேனியில் சாத்திக்கொண்டு அதனால் மிக்க சோபிதனாய் விசாலமான தாமரைமலரைப் போன்ற சிவந்த நேத்திரங்களையுடைய விண்ணோர் பெருமானை அவனுக்கேற்கும் ரஸமான பாட்டுக்களால் துதிசெய்து நினைக்கப்பெற்ற எனக்கு இனிமேல் முடியாததென்று ஒரு பொருள் உண்டோ?

விசேஷக் குறிப்பு:—இவ்வுலகத்தில் கோயில்கள் கொண்டிருக்கும் எம்பெருமான் படிவங்களுக்குத் திருமண்கொண்டு இடும் வைஷ்ணவ சின்னத்தைப் பற்றி இப்பாசுரம் கூறவில்லை. ஸ்ரீ வைகுண்டநாதனுக்கு இப்பூமியிலுள்ள திருமண் துர்லபமேயாகும். ஆகையால், பச்சைக் கற்பூரத்தின் வெண்மையான பொடியென்று உரையில் நாம் எழுதியது உபசாரமே. இவ்வுலகத்தில் கண்டுகொள்ளக்கூடாத பலவித திவ்விய விநோத சூர்ணங்களால் ஸ்ரீ வைகுண்டத்தில் உள்ள ஸூரிகள் பகவானை அலங்கரிப்பார்கள். அதன் வர்ணம்மாத்திரம் ஆழ்வாரது திருக்கண்களுக்கு வெள்ளையாயிருந்ததாகத் தெரியவந்ததை நமக்கிங்கருளிச் செய்கிறார். ஆசையின் கொடுமையால் பக்தர்கள் அழகுக்கு அழகுசெய்வார்.

7-ம் பாசுரம்.

என்று மொன்றாகி யொத்தாரு
மிக்கார்களுந் தன்றனக்
கின்றி நின்றானை யெல்லாவுலகு
முடையான் றன்னைக்
குன்ற மொன்றால் மழைகாத்த
பிரானைச் சொன்மாலைகள்
நன்று சூட்டும் விதியெய்தின
மென்னகுறை நமக்கே.

பொழிப்புரை:—சகலகாலமும் ஒரே மாதிரியாய்த் தனக்கு நிகழ்வும் உயர்வு முள்ளவர்கள் இல்லாதவனாய்ச் சர்வலோகங்களுக்கும் ஈசனாய், கோக்கள் முதலான ஸகலபிராணிகளையும் பரமகாருணியத்துடன் ரக்ஷிப்பவனுமிருந்த எம்பெருமானை நல்ல கவிகள் பாடுகைக்கு ஈடாய் அவனுடைய நிரவதிக அருளாலே பெரும்பேற்றை யடைந்த வெனக்கு இனி என்ன குறையுண்டு.

தமிழ்ப் பாடம் 55.

நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[71-வது பக்கத் தொடர்ச்சி]

மனைவியை விட்டுப்பிரிந்த வருத்தத்தோடு கடற்கரையை அடைந்த நளன் தன்னைக்கண்டு பரிபவர் எவரேனும் இருப்பாரோ என்று ஏங்குவான்போல் திகைப்புற்று நாற்றிசையும் நோக்குவானயினன். அன்னவனுக்கு முதலில் தென்பட்டது ஒரு கொக்கு. அதற்கு எதிரேசென்று வாய்பார்த்து நின்றான். அதுவோ, கிளையில் உட்கார்ந்துகொண்டு கம்பீரமாய் இவனைப் பார்த்ததேயொழிய ஒன்றும் பேசவில்லை. பிறகு வண்டுகளிடத்திலேனும் பரிவு காணலாமோ வென்று பார்க்க, அவைகளோ தம்முடைய செய்கையால் இவனைப் பழித்து இடித்துரைப்பனபோல் தோன்றின. அதன்பின் கடற்கரையோரம் சென்றான். ஆளரவம்கேட்டவுடன் கதுமெனஓடிக் கடலில் குளித்துவிடுவது நண்டுகளுக்கு இயற்கை. அதன்படியே அங்கு மேய்ந்திருந்த நண்டுகள் விரைந்துபோய்க் கடலில் முழுகிவிட்டன. அதனை ஆதாரமாக வைத்துக் கொண்டு புகழேந்திப்புலவர் ஓர் அழகிய தற்குறிப்பேற்றவணியை அடுத்த செய்யுளில் அமைத்துப் பாடுகின்றார்:—

காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ—நாதம்
அளிக்கின்ற வாழிவா யாங்கலவ வோடி
யொளிக்கின்ற தென்னோ வுரை. 20.

பதப்பிரிவு:—காதலியை கார் இருளில் கானகத்தே கைவிட்ட பாதகனை பார்க்க படாது என்றோ நாதம் அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கு அலவ ஓடி ஒளிக்கின்றது என்னோ உரை.

அன்வயம்:—அலவ, நாதம் அளிக்கின்ற ஆழிவாய் ஓடி ஒளிக்கின்றது, காதலியைக் கார் இருளில் கானகத்தே கைவிட்ட பாதகனைப் பார்க்கப்படாது என்றோ, என்னோ, உரை,

பதவுரை.

அலவ - நண்டே,
நாதம் - ஒலியை
அளிக்கின்ற - தருகின்ற
ஆழிவாய் - கடலில்
ஓடி - (என்னைப் பார்த்தமாத்திரத்தில்)
ஓடிப்போய்
ஒளிக்கின்றது - ஒளிக்கின்ற இச்செய்கை,
காதலியை - மனைவியை
கார் - கரிய
இருளில் - இருட்டில்
கானகத்து - காட்டில்

கைவிட்ட - கைவிட்டு வந்த
பாதகனை - பாதகனாகிய என்னை
பார்க்கப்படாது - பார்ப்பது தகாது
என்றோ - என்று எண்ணியோ,
என்னோ - அல்லது வேறேதேனும்
காரணம் உளதோ
உரை - சொல்லுவாய்.

என்று நளன் கூறினான். (ஆங்கு - அசை).

விரிவுரை:-இது தற்குறிப்பேற்றவணி. தற்குறிப்பேற்றத்தில் இது, உளபுல வேதுத்தற்குறிப்பேற்ற வணியாகும். இவ்வணியின் இலக்கணத்தை முன்விரிவாக எடுத்து எழுதியிருக்கின்றோம். அதனை மறவாமல் காக்கும்பொருட்டு இங்கு ஓர்முறை நினைவுபடுத்திக் கொண்டு இந்தச் செய்யுள் உளபுலவேதுத் தற்குறிப்பேற்றவணிஎவ்வாறு ஆகின்றதென்பதையும்தேர்ந்து கொள்வது நல்ல பயிற்சியாகும்.

நளனைக் கண்டமாத்திரையில் கடலில்போய் விழுகின்ற நண்டிற்கு இரண்டுவித கருத்துக்கள் கற்பிக்கலாம். ஒன்று "இப்படிப்பட்ட பாதகனைப் பார்ப்பதை விடக் கடலில் விழுந்தாகிலும் மறைந்துகொள்வதே தக்கது" என்னுங் கருத்து. இதனைத்தான் புகழேந்தி ஏற்றுக்கொண்டார். மற்றது, "இத்தகைய பாதகனைப் பார்த்த பாவம் ஸமுத்திர ஸ்நாநம் செய்தால்தான் போகும்" என்பது. "ஓடிஒளிக்கின்றது என்னோ" என்று கூறுவதால் பின்சொன்ன கருத்தை நளன் கொள்ளவில்லை என்பது தெரிகின்றது.

குறிப்பு:—இருளில், என்பது ஏழாம் வேற்றுமை. இல் என்னும் ஏழனுருபு வந்திருக்கின்றது. கானகத்து, என்பதும் ஏழாம் வேற்றுமைதான்; ஆனால் இல் என்ற உருபு இல்லை. அத்து என்னும் சாரியை மாத்திரம் பெற்று உருபுபெறாமல் சொற்கள் வேற்றுமை யடையக்கூடும் என்று முன் நாம் சொல்லியிருப்பதற்கு இது உதாரணம் ஆகும். கானகம் + அத்து- கானகத்து. அலவ, என்பது விளிப்பதால், எட்டாம் வேற்றுமை; முதல் வேற்றுமை, அலவன்.

பானலே சோலைப் பசுந்தென்றல் வந்துலவும்
கானலே வேலைக் கழிக்குருகே-யானுடைய[ணர்ந்தால்
மின்னிமைக்கும் பூணாளவ் வீங்கிருள்வா யாங்கு
என்னினைக்குஞ் சொல்வீ ரெனக்கு. 21.

பதவுரை.

பானலே - நீலோற்பல மலரே, [க்கும்
சோலை - (உள்நாட்டுச்) சோலைகளிலிருந்து அடி
பசும் - இளமையான
தென்றல் - தென்றல் காற்றானது
வந்து - வந்து
உலவும் - உலவுகின்ற
கானலே - கடற்கரைச் சோலையே,
வேலை - கடற்கரையிலுள்ள
கழி - உப்பங்கழிகளில் வசிக்கும்
குருகே - நாரையே,
யான் உடைய - என்னுடைய நாயகியாகிய,
மின் - பிரகாசத்தை
இமைக்கும் - வீசுகின்ற
பூணாள் - ஆபரணங்களையணிந்த தமயந்தி
ஆங்கு - அக்காட்டில்
அவ் - அந்த
வீங்கு - மிகுகின்ற
இருள்வாய் - இருட்டில்
உணர்ந்தால் - யான் கைவிட்டுப்போனதை
நித்திரை நீங்கி, அறிந்தவுடன்
என் - யாது
நினைக்கும்-என்னையும் நான் செய்த காரியத்தையும் பற்றி யாது நினைப்பாளோ என்பதை
எனக்கு - எனக்கு
சொல்வீர் - சொல்லுங்கள் (என்றான் நளன்)

விரிவுரை:—கொக்கோ ஒன்றுங் கூறவில்லை. வண்டோ தன் பெடைக்குத் தாது ஊட்டி இவனை அஞ்ச வைத்தது. நண்டோ கண்டவளவில் ஓடிக் கரந்தது. எனவே, நளன் நீலோற்பலத்தையும் சோலையையும், நாரையையும் கூவி "நீவிரேனும் எனக்கு ஆறுதல் கூறீரோ" என்பவன்போல் "தமயந்தி என்ன நினைப்பாள். சொல்லுங்கள்" என வினவினான். அவைகளும் இச்சொற்களுக்குக் காதுகொடுத்து இவனைக்கண்ணெடுத்துப் பார்க்கவில்லை. எனவே, "பறவைக்கும் மற்ற ஜந்துக்களுக்கும் பூவிற்கும் செடியிற்கும், இரக்கமென்பதில்லை. மேலும் மிகவும் தாழ்ந்த இனத்தைச் சேர்ந்த இவை என்போன்றவொரு வேந்தனது துயரத்தின் தன்மையை உணரத்தக்கன வல்ல. ஆகையால், எனக்கு இணையான இச் சமுத்திராஜனிடத்தில், ஏதேனும் பரிவு எதிர்பார்க்கலாம்" என்று கடலை நோக்கினான். அவ்விடத்திலோ, தன் முறையே தம்பிரான்முறையுமா யிருந்தது. ஆகையால் கூறுவான்:—

போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய்—தீவாய்
அரவகற்று மென்போல வார்கலியே மாதை
யிரவகற்றி வந்தாய்கொ லின்று. 22.

பதப்பிரிவு:—போவாய் வருவாய் புரண்டு விழுந்து இரங்கி நாவாய் குழற நடுங்கு உறுவாய் தீவாய் அரவு அகற்றும் என்போல ஆர்கலியே மாதை இரவு அகற்றி வந்தாய்கொல் இன்று.

பதவுரை.

ஆர்கலியே - கடலே,
தீவாய் - நெருப்பில் புகுந்து
அரவு - பாம்பை
அகற்றும் - நீக்கிக் காத்த
என்போல - என்னைப்போல (நீயும்)
போவாய் - போகின்றாய்,
வருவாய் - வருகின்றாய்,
புரண்டு - புரண்டு
விழுந்து -விழுந்து
இரங்கி - ஒலித்து - வருந்தி
நாவாய் - மரக்கலம் - வாயிலே நாக்கு
குழற - தடுமாற - புலம்ப
நடுங்குறுவாய் - அசைகின்றாய்-நடுங்குகின்றாய்,
(ஆதலால் நீயும்)
மாதை - உன் மனைவியை
இரவு - நேற்று இரவு
அகற்றி - நீக்கிவிட்டு
இன்று - இன்றைக்கு
வந்தாய்கொல் - வந்திருக்கின்றாயோ!

விரிவுரை:—இதுவும் தற்குறிப்பேற்றம். கடலினிடத்திலேனும் தன் நெஞ்சிலுள்ள குறையைக்கூறிக்

கொள்ளலாம் என்று கருதிய நளனுக்கு அங்கு அதுவும் தன்னைப்போலவே தோன்றியது. தமயந்தியைப் பாழ்மண்டபத்தில் தனிவிட்டுப் பிரிந்துபோனபோது 'ஆயர் கொணர்ந்த அடுபாலில் தோயல் கடைவார் தம் கைபோன்று இவன் மனம் ஆனதால், இவன் 'போய் ஒருகால் மீள்வதும், புகுந்து ஒருகால் மீண்டு ஏகுவதும்' ஆனான்; கடலும் போவதும் வருவதும் ஆயிற்று. நளன் தன் துக்கந் தாங்கமாட்டாமல் விழுந்து புரண்டிருக்கவேண்டும். அப்படிச் செய்தான் என்று புகழேந்தி கூறவில்லையாயினும் இங்கு நளனே சொல்வதிலிருந்து அது தெரிகின்றது. கடலும் விழுந்து புரள்கின்றது. நளனும் இரங்குகின்றான், கடலும் இரங்குகின்றது. இரங்குதல் என்னும் சொல்லிற்கு வருந்துதல் என்றும், ஒலித்தல் என்றும் இரண்டு அர்த்தங்கள் உண்டு. அந்த இரண்டு அர்த்தமும் வைத்துச் சிலேடையாகக் கவி இவ்விடத்தில் அப் பதத்தை உபயோகப்படுத்தியிருக்கின்றார். நளன் வருந்துதலாகிய இரங்கலைச் செய்கின்றான். கடல் ஒலித்தலாகிய இரங்கலைச் செய்கின்றது. அவ்விதமே, நாவாய் என்பதற்கு இரண்டு அர்த்தம் கொடுத்து நளனையும் கடலையும் சம்பந்தப்படுத்துகின்றார் கவி. நாவாய், என்பைத நாவாய் என்று இரண்டு சொற்களாகக் கொண்டால், தன் நாக்கு வாயிலே குழறும்படி நளன் நடுங்கினான் என்று பொருள்படும். நாவாய், என்று ஓரே சொல்லாகக் கொண்டால் 'கப்பல்' என்பது அர்த்தம். அப்பொழுது, 'கப்பல்கள் குலுங்கும்படி கடல் அசைகின்றது' என்பது பொருள் ஆகும்.

"தீவாய் அரவு அகற்றும் என்போல" என்று நளன் தன்னைச் சொல்லிக்கொண்டதால் இந்த விதத்திலும் அவனுக்கும் கடலுக்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டோ என வொரு சந்தேகம் ஏற்படுகின்றது. நளன் தீயிலிருந்து பாம்பை அகற்றினான். கடலின் கீழ் வடவாமுகாக்கினியும், அவ்வக்கினிக்கு அடியில் ஆதிசேடன் என்னும் பாம்பும் இருக்கின்றபடியால் ஒரு விதத்தில் கடலும், தீயோடும் பாம்போடும் சம்பந்தப்பட்டிருக்கின்றது.

ஆதலால், தன்னைப்போலிருந்து தான் செய்வதை எல்லாம் செய்பவே, கடலும் தன்னைப் போலவே முன்னாள் இரவில் தன் மனைவியை விட்டுப் பிரிந்து வந்திருக்கவேண்டுமென நளன் அனுமானஞ் செய்துகொண்டு, "நாம் இருவரும் ஒருநிலையி லிருக்க, உன் இடத்தில் என் வருத்தத்தைச் சொல்லித்தான் பயன் என்ன ?" என்று நினைப்பவனாயினான்.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[72-வது பக்கத் தொடர்ச்சி]

(b) எழுத்துக்களின் பிறப்பு, பவணந்தியுணரா அடிப்படை.

தொல்காப்பியனார் எழுத்துக்களின் பிறப்பிற்குப் புறனடை கூறுங்காலை,

"எல்லா வெழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி யெழுதரு வளியிற்
பிறப்பொடு விடுவழி யுறழ்ச்சி வாரத்
தகத்தெழு வளியிசை யரில்தப நாடி
யளப்பிற் கோட லந்தணர் மறைத்தே
யஃதிவ ணுவலா தெழுந்துபுறத் திசைக்கு
மெய்தெரி வளியிசை யளாவுநுவன் றிசினே"

தொல் - எழுத்தி - பிறப்பியல் 102

மேற்கண்ட சூத்திரத்தில், "அகத்தெழு வளியிசை அரில்தப நாடிக்கோடல்" என்பதற்கு நச்சினார்க்கினியர் "மூலாதாரத்தில் எழுகின்ற காற்றினோசையைக் குற்றமற நாடிக்கோடலும்"—அந்தணர் மறைத்தே என்றார். அவ் வந்தணர் மறையிற் காணக்கூடியதைத் தமிழ்மறையினுங்கூடக் காணலாம். ["எழுந்து புறத்திசைக்கும் மெய்தெரி வளியிசை அளவு நுவன்றிசினே" என்பதன் பொருள், "உந்தியிற் றோன்றிப் புறத்தே புலப்பட்டு ஒலிக்கும், பொருள் தெரியுங் காற்றினது தணிவிற்கே யான் மாத்திரை கூறினேன்" என்றுஉணர்க, என்பர் நச்சினார்க்கினியர்]

பொருள் மறைக்கப்பட்டு யாவற்றிற்கும் பொருளாய் நின்ற மூலப்பிரணவ வடிவான ஓங்கார ஒலியே ஓகார வடிவாய் எல்லா உயிர்களுக்கும் வடிவம் தரும். எல்லா உயிர்களென்பது-இயற்கையிலுள்ள சகலபிராணிகளான உயிர்களும் பிறக்கும்போது பெற்ற உருவம் ஓகர வடிவமென்பதும், அன்றுபிறந்த மனிதக் குழவிமுதல், குரங்கு, பன்றி, கன்று, முயல், கோழி, ஆமை, மீன்வரையில் எல்லாச் சீவராசிகளும் பெறுகின்றன வென்பதும் பிரத்தியட்சக்காட்சி. இவைகள் மாத்திரமல்ல; மனிதன் முதலிய ஜீவர்களின் உடலிலுள்ள மூளை, குடல், காது, முதலிய அவயவங்களும் தேகத்தில் வெட்டக்கூடிய பகுதிகள் பலவும் ஓகரவடிவாய்த் திகழ்கின்றன எனவும், பிறக்கும் குழவியும், தளர்ந்து தண்டூன்றிநடக்கும் கிழமும் ஓகர வடிவாம் என்றும், சின்முத்திரையோடு பத்மாசனத்தில் வீற்றிருக்கும் யோகியும் * அவ்வடிவே யென்றும் P. V. மாணிக்க நாயகர் அவர்கள் படங்களுடன் வெளிப்படுத்தியிருக்கின்றார். அம்மாதிரியே, தாவர வகைகளான மரம், செடி, பூ முதலியனவற்றிலும் அவ்வுருவமே விளங்கக் காண்கின்றோம். இத்தன்மையே,

"ஓங்காரத் துள்ளே யுதித்த வைம்பூதங்கள்
ஓங்காரத் துள்ளே யுதித்த சராசரம்
ஓங்காரா தீத்துயிர் மூன்று முற்றன
ஓங்காரம் சீவ, பர, சிவ ரூபமே"

என்றும்,

"ஓமெனு மோங்காரத் துள்ளே யொருமொழி
ஓமெனு மோங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனு மோங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனு மோங்கார மொண்முத்தி சித்தியே"

* ஆலடி மோனத் தென்முக ஞெகாரம்
குழைக்கும் பிஞ்ஞகக் கூத்த னகாரம்
அன்னத் திருமேனி யிரண்டேர் தமிழ்க்கே
உகந்தன னரனென வோர்ந்து தாழ்மினே.

என்றும் ஆன்றோர் மொழிந்த கருத்தாகும். இதையே நம்பியாரூரர்,

ஊனங்கத் துயிர்பா யுயிர்க்கெல்லாம்
ஓங்காரத் துருவாகி நின்றானை
வானங்கத் தவர்க்கும் மளப்பரிய
வள்ளலையடி யார்கடம் முள்ளத்
தேனங்கத் தமுதாகி யுள்ளூருந்
தேசனைத் தினைத்தற் கினியானை
மானங்கைத் தலத்தேந்த வல்லானை
வலிவலந் தனில்வந்து கண்டேனே"

என்றார். அத்தலத்தில் திருநாவுக்கரசு பாடிய பாசுரம் ஒன்றை நோக்குக:—

உய்த்தவன்கா ணுடறனக்கோ ருயிரா னான்கா
ணோங்காரத் தொருவன்கா ணுலகுக் கெல்லாம்
வித்தவன்காண் விண்பொழியு மழையா னான்காண்
விளைவவன்காண் விரும்பாதார் நெஞ்சத்தென்றும்
பொய்த்தவன்காண் பொழிலேழுந் தாங்கி னான்காண்
புனலோடு வளர்மதியும் பாம்புஞ் சென்னி
வைத்தவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே.

திருவலிவலம் - திருத்தாண்டகம் 4.

இவ்வாறு ஓங்கார தத்துவத்தின் எல்லாத் தத்துவங்களும் அமைந்து நிற்குமாபோல், தமிழ் நெடுங்கணக்கும் நிற்குமென்றுபிறன்கோட் கூறலாய் அகத்தெழுவளியாகிய மூலாதாரக்காற்று அந்தணர்மறையில் கொள்ளப்படுமென்றார், தொல்காப்பியனார். மற்றும்,

அங்கமு மாகம வேதம தோதினும்
எங்கள் பிரானெழுத் தொன்றி லிருப்பது
சங்கைகெட்டவ்வெழுத்தொன்றையுஞ்சாதித்தால்
அங்கரை சேர்ந்த வருங்கல மாமே"

என்பது காண்க.

மூலாதாரக் காற்றாக ஓகரவடிவம் இயற்கையில் எங்கும் காணப்படுகின்ற வடிவமே. இதையே தமிழில் மூளையெழுத்தாய் எழுதினர். அக்காலத்தில் இவ்வெழுத்தைஉயிரென்பதற்குமில்லை, மெய்யென்பதற்கும் இல்லை. இரண்டு உருவமும் சேர்ந்ததுபோலும் சிவசக்தி யுருவம்போலும் தலையிற் புள்ளிபெற்று நிற்கும். எ என்பது பதார்த்தத்தை வினவும் ஒலியும் ஒ என்பது பதார்த்தத்தைக் குறிப்பிடும் ஒலியுமாம். இவ்விரண்டும் ஏககால உற்பத்தியர்தலால் எகர ஒகரமிரண்டும் தம் தலைமேல் புள்ளிபெற்றுத் தமிழ்நெடுங்கணக்கில் கி. பி. ஐந்தாறு நூற்றாண்டுகள் வரையிலும் எழுதப்பட்டன. தொல்காப்பியனார் சூத்திரங்களான "மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்," "எகர ஒகரத் தியற்கையு மற்றே" என்பனவற்றைத் தொகுத்துப் பவணந்தி, 'தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண் டெய்து மெகர மொகரமெய் புள்ளி" என்றாரே யன்றி, ஏன் புள்ளி, எகரத்திற்கும் ஒகரத்திற்கும் வந்ததென்பது விளக்கவில்லை. நன்னூல் சங்கரநமச்சிவாயர் உரையில், இவ்விரண்டும், ககரமெய்யுடன்கூடி உயிர்மெய் யெழுத்துக்களான கெ, கொ என்பவற்றின் கொம்பின் (எகரத்திற்கும் ஒகரத்திற்கும் பொதுப்பாகமான கோடு) தலையிற் புள்ளிவைத்துக் காட்டுகின்றார். எனவே எகரம் ஒகரத்தில் அடங்கிமுடியும்.

உள்ளத்தி னுள்ளிருந்து பிறக்கும் ஓங்காரமானது ஒளிமயமானதால் * அது கல்விக்கு அடிப்படையான நெடுங்கணக்குத் தத்துவத்திற்கும் அடிப்படையாகும். "இழைக்கும் எழுத்துக் குயிரே யொத்தியால், இலையே யொத்தியா னையே யொத்தியால்" என்று திருவஞ்சைக்களத்தப்பரை வன்றொண்டர் பாடுவது காண்க.

திருநாவுக்கரசும்,

"ஊனவனை யுடலவனை யுயிரா னானை
யுலகேழு மானானை யும்பர் கோவை
வானவனை மதிசூடும் வளவி யானை
மலைமகண்முன் வராகத்தின் பின்பே சென்ற
கானவனைக் கயிலாய மலையு ளானைக்
கலந்துருகி நைவார்தந் நெஞ்சி னுள்ளே
பானவனைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநா னுழன்ற வாறே.

திருப்பள்ளியின் முக்கூடல் - திருத்தாண்டகம் 9

"புரிந்தமரர் தொழுதேத்தும் புகழ்தக் கோன்காண்
போர்விடையின் பாகன்காண் புவன மேழும்
விரிந்துபல வுயிராகி விளங்கி னான்காண் [கும்
விரைக்கொன்றைக் கண்ணியன்காண் வேத நான்
தெரிந்துமுதற் படைத்தோனைச் சிரங்கொண் [டோன்காண்
தீர்த்தன்காண் திருமாலோர் பங்கத் தான்காண்
திருந்துவயல் புடைதழுவு திருப்புத் தூரிற்
றிருத்தளியான் காணவனென் சிந்தை யானே"

திருப்புத்தூர் - திருத்தாண்டகம் 1.

என்பர்.

இவ்வாறு மூலமுதற் கருவாகி அமைந்த பிரணவவுருவானது உயிர் மெய் இரண்டிற்கும் ஒக்கநின்றபின்னர் அகரமாய், எல்லாவுயிருமாய் மகரமாய் எல்லா மெய்யுமாய்த் தமிழ் நெடுங்கணக்கு இயற்கையில் கிரமப்படி உதித்ததென்பதைத் தொல்காப்பியனார்குறிப்பிட்டிருப்பினும், பிற்காலத்திய நவீன இலக்கணகாரர்களான பவணந்திமுதலிய சமணர் அருமறைப் பொருள் அறிந்திலராதலால், இச் சூக்குமங்களைக் கவனியாமல், தமது மனப்போக்கின்வண்ணம் இலக்கண வியல்களும் வகுக்கலாயினர். ஆதலால் தர்க்க சாத்திர வொழுங்கில் இவர் வகுத்த வியாகரணவிதிகள் நிற்காமற் போயின.

"பழுத்தன வைந்தும் பழமறை யுள்ளே
விழித்தங் குறங்கும் வினையறி வாரில்லை
எழுத்தறி வோமென் றுரைப்பர்க ளேதர்
எழுத்தை யழுத்து மெழுத்தறி யாரே"

என்பது போல் நன்னூலும் திகழ்கின்றது. நமது ஆளுடையவரசு பெற்ற கல்வி கசடற்றதால், எழுத்தின் உற்பத்தியைப் பலவகை யுருவங்களில் அவர் தேவாரத்தில் குறிப்பிடுகின்றார்.

* நாதனை நாதமிகுத் தோசைய தானவனை
ஞானவிளக் கொளியாம் ஊறுமிரைப் பயிரை
மாதனை மேதகுதன் பத்தர் மனத்திறையும்
பற்றுவிடா தவனைக்குற்றமில் கொள்கையனைத்
தூதனை யென்றனையா ளோழனை நாயகனைத்
தாழ்மக ரக்குழையுந் தோடு மணிந்ததிருக்
காதனை நாயடியே னெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே.

சுந்தரர்

காற்று மழை

Shakespeare—"The Tempest"

அங்கம் 1. களம் 2.

[76-வது பக்கத் தொடர்ச்சி]

ப்ராஸ்ப்பீரோ:—விண்ணப்பங்களை அளிப்பதும் மறுப்பதும் எவ்வண்ணம் என்பதிலும், யாரை முன்னுக்குக் கொண்டுவருவது, விஞ்சாமல் யாருக்குக் கட்டையிடுவது என்பதிலும் தேர்ச்சியுற்று, என்னால் ஆக்கப்பட்டு என்னைச் சேர்ந்தவர்களாயிருந்தவர்களைப் புதிது அவன் படைத்தனன், அல்லது-இதுகேள்—மாற்றினன், அல்லது,புதிது உருவஞ் செய்துகொண்டனன் (1). இவ்வண்ணம், அதிகாரி அதிகாரம் ஆகிய இவ் விரண்டிற்குமுரிய மாடகத்தைக் கையிற்கொண்டு, இராச்சியத்தின்கண் உள்ள இதயங்கள் அனைத்தையும் தன் செவிக்கு இசைந்த பண்ணடைவிற்குச் சுதிகூட்டி முறுக்கி வைத்தனன் (2). இதனால், என் அரசதேகத்தை மறைத்த ஐவி ஆகி, எனது பசுமையை உறிந்து விட்டான் (3) கவனமுடன்நீ கேட்கவில்லையே (4)

மிராண்டா :—ஓ, நல்ல வென் தந்தாய், கேட்கின்றேன்.

ப்ராஸ்ப்பீரோ:—உற்றுக்கேள் பார்ப்போம்-இவ்வண்ணம் யான் இவ்வுலகப்பயன்களைப் புறக்கணித்துத் தனியே விலகியிருந்து என் மனத்தின் நலனிற்கே என்னை அர்ப்பணம்செய்துகொண்டவனாயினேன். உலகத்தினின்று ஒதுங்கவைப்பினும், பொதுமக்கள் நன்மதிப்பெலாம்விட மிகவுயர்ந்த அது (5), என் பொய்யுடைத் தம்பியில் ஓர் தீய தன்மையை எழுப்பித்தந்தது (6). நல்லவோர் தந்தைபோன்ற என் நம்பிக்கை, அதற்கெதிர், அந் நம்பிக்கை எத்துணைப் பெரியதோ அத்துணைப் பெரியவொரு வஞ்சனையை அவனின்று பெற்றது—உண்மையில் அதற்கோர் எல்லையில்லை, வரம்பற்ற விசுவாசம் (7). இன்னவாறு அவன், என் செல்வத்தின் வருவாய் ஈந்ததாலன்றியும், மற்று, என் செல்வாக்கைக்கொண்டு இறுக்கவல்லதாலும் எசமானனாகிவிடவே (8), அடிக்கடி சொல்லிச் சொல்லித் தன் பொய்யினைத் தானே நம்பும்படி மெய்ம்மையின்பால் தன் ஞாபகத்தைப் பெரும் பாவியாக்கிய வொருவனேபோல் இவன் எனக்குப் பதிலாக இருந்து அரசனெனும் வெளித்தோற்றத்தை நடத்துவதினின்று எல்லா அதிகாரவுரிமையுடனுந் தங்குதடையற்ற மிலான் தானேயென்று தன்னை எண்ணிவிட்டான். (9) ஆதலின், அவன் பேராசை பெருகி—கேட்கின்றாயோ நீ ?

மிராண்டா:—உன் கதை, ஐய, செவிட்டுக் காதையும் செம்மை செய்யுமே.

ப்ராஸ்ப்பீரோ:—அவன் ஆடிய இவ்வேடத்திற்கும், எவனுக்குப் பதிலாக ஆடினனோ அவனுக்கும் இடையே திரையொன்றும் இலதாகித் தானே முழு மிலானென இருக்கவலித்தான் (10). எனக்கோ, ஏழையேன், என் புத்தகச்சாலையே அரசு பெரிது போதியதாயிற்று. இம்மண்ணுலக ஆட்சிக்கோ என்னைத் திறமையற்றவனென் றெண்ணிவிடுகின்றான். ஆட்சிக்கு அவன் அத்துணை வறண்டிருந்தால் (11), ஆண்டுதோறும் திறைவழங்கி, அடங்கி வழிபட்டு, தன் முடியினை அவன் மௌலிக்குக் கீழ்ப்படுத்தி, வணங்காத இவ் வரசினை—ஐயோ பாவம் ஏழை மிலான்-இழிவுடை இளிவர வணக்குதற்கு நேப்ல்ஸ் வேந்தனுடன்சந்துசெய்துகொள்கின்றான் (12).

மிராண்டா:—ஓ, தெய்வமே!

ப்ராஸ்ப்பீரோ:—அவன் உடன்படிக்கையையும் அதன் மேல் நிகழ்ந்தவைகளையும் கேள். அதன் பின், இதுவோர் தம்பியா யிருக்கக்கூடுமோவென் றெனக்குச் சொல்.

மிராண்டா:—என் பாட்டியைப்பற்றிப் பெருமையுடனல்லாமல் நினைப்பது பாவம். நல்ல வயிறுகள் கெட்ட பிள்ளைகளைப் பெற்றிருக்கின்றன. (13)

(1) ப்ராஸ்ப்பீரோ அரசகாரியங்களைக் கவனிக்காமற் போகவே, அன்ட்டோனியோ தன் செல்வாக்கை உறுதி செய்துகொண்ட விதங்கள் இங்குக் கூறப்படுகின்றன. கொடுத்துச் சிலரைத் தன்வயமாக்கிக்கொண்டானேனும், மறுத்தாலும் அவர் மனம் வெறுத்துப் பகைவராகாதபடி மறுக்கக் கற்றனன். தனக்குப் பயன்படக் கூடியவர்களை அரசாங்கத்தில் முன்னுக்குக் கொண்டு வந்தான்; மற்றுஞ் சிலர் மிகவும் விஞ்சிச் செல்பவர்போல் தோன்றினால், (மேயச்செல்லும் மாடு அதிக தூரம் போய்விடாதபடி அதன் கழுத்தில் ஒரு கட்டையைக் கட்டிக் காலைத் தட்டித் தட்டித் தடுக்கவிட்டுவிடுவது போல்) அவர்களுக்கு ஏதேனும் தடைகள் செய்தமைப்பான். இப்படி, நான் என்னைச் சார்ந்தவர்களாய் முன் ஆக்கிவைத்திருந்தவர்களை இப்பொழுது தனக்கு இசைந்தவர்களாய் மாற்றிக் கொண்டனன்.

"இதுகேள்" என்பது, தான் சொல்வதைக் கவனமாய்க் கேட்கும்படி இடையிலே மிராண்டாவிற்குக் கூறியது.

(2) மாடகம் - வீணை முதலிய வாத்தியங்களின் முறுக்காணி. முறுக்காணியைக் கொண்டு, தனக்கு வேண்டிய சுதியை ஒருவன் வாத்தியத்தில் அமைத்துக்கொள்வது போல், அன்ட்டோனியோ, தான் அதிகாரம் உடையவனாகவும், மற்றவர்க்கு அதிகாரம் கொடுக்கக் கூடியவனாகவும் இருந்தமையால், இந்த நிலைமையை (மாடகம்) கொண்டு, இராச்சியத்தில் இருந்தவர்களை எல்லாம் தன்னுடைய இச்சைக்கு இசைந்தபடி நடக்கவைத்தான்.

(3) ஐவி என்பது ஒரு மேனாட்டுக் கொடி. இது மரங்களின்மீது அடர்ந்து படரும். படர்ந்து அம்மரங்களின் சாரத்தை உறிந்துகொண்டுவிடும் என்பர். அவ்விதமே, அன்ட்டோனியோ ப்ராஸ்ப்பீரோவை மறைத்து அவன் செல்வாக்கையெல்லாம் உறிந்துகொண்டு விட்டான்,என்பது பொருள்.

(4) உற்றுக்கேட்கும்படி மிராண்டாவை அடிக்கடி தூண்டுகின்ற வாக்கியங்களில் இதுவும் ஒன்று.

(5) "அது—என்பது, ப்ராஸ்ப்பீரோ ஈடுபட்டிருந்த கல்வியைக் குறிக்கின்றது. கல்வியில் ஈடுபடுபவர் உலகத்தில் ஊடாடாமல் தனியே ஒதுங்கிவிடவேண்டி வருகின்ற வொரு குறை தவிர, அக்கல்வியால் பெறுகின்ற மனநலமானது; இம்மைப்பயன்கள் எனக் கருதப்படும் செல்வம் அதிகாரம் புகழ் எல்லாவற்றையும் விட மிகச் சிறந்தது—என்பது பொருள்.

(6) நான் இப்படிக் கல்வியிலேயே என் கருத்தை எல்லாம் செலுத்தி ஒதுங்கிவிடவே, என் தம்பியின் மனத்தில் ஒரு தீய எண்ணம் பிறந்தது—என்பது பொருள்.

(7) அதற்கோர் எல்லை இல்லை—நான் என் தம்பியிடம் வைத்திருந்த நம்பிக்கைக்கு எல்லை யில்லை; அதற்கெதிர் அவன் நினைத்த வஞ்சனைக்கும் எல்லை யில்லை—என்பது கருத்து.

(8) என் செல்வத்தை உபயோகித்தும், என் செல்வாக்கைத் தான் செலுத்திப் பிறரிடம் வற்புறுத்திக் கவர்ந்த பொருள்களைக் கொண்டும் தன் அதிகாரத்தை வலிவு செய்துகொண்டு தன்னையே முழு எசமானனாக எல்லாரும் கருதி நடக்கும்படி ஏற்படுத்திக்கொண்டான்—என்பது பொருள்.

(9) எனக்குப் பதிலாக இருந்து அரசகாரியங்களைப் பார்த்துக்கொண்டு இருப்பவனேயொழிய அன்ட்டோனியோவே அரசனல்லன். ஆயினும் தானே அரசன் என்பதுபோல் பாவனைகள் செய்து செய்து பழகியதால், மற்றவர்களுக்குப் பாவனையாகப் புரிந்துவந்த அந்தப் பொய்யைத் தானே நம்பும்படி, தான் எனக்குப் பதிலாக இருந்த தன்மையை மறந்துவிட்டான்,என்பது பொருள்.

ஒரு பொய்யை அடிக்கடி பலபேரிடத்தில் சொல்லிக் கொண்டுவருபவனுக்குக் கடைசியில் தான் சொல்வது மெய்தானோ என்ற சந்தேகம் ஏற்பட்டுவிடுவது இயல்பு.

மிலான் என்பது,—மிலான் இராச்சியத்தின் அரசன் என்பதை ஆகுபெயராய்க் குறித்து நிற்கின்றது.

(10) எனக்குப் பதிலாகத் தான் அரசனென நடிப்பதை விட்டுத் தானே மிலானுக்குப் பூரணத் தலைவனாகி விடுவதற்கு நிச்சயம் செய்துகொண்டான்—என்பது பொருள்.

(11) ஆட்சிக்கு வறண்டிருத்தலாவது—ஆட்சி செய்ய வேண்டும் என்னும் தாகம் மிக அதிகமாயிருத்தல்.

(12) நான் ஒருவருக்கும் அடங்காமல் ஆண்டுவந்த இவ்விராஜ்யத்தை நேப்ல்ஸ் அரசனுக்குக் கீழ்ப்படுத்தி, அதற்கு மாறாக, என்னைத் தொலைப்பதற்கு அவன் உதவியை வேண்டி ஆன்ட்டோனியோ உடன்படிக்கை செய்துகொண்டான்—என்பது பொருள். மௌலி - கிரீடம்.

இறந்தகாலத்தை நிகழ்காலமாகக் கூறுவது சரித்திர முறையில் அமையும்.

(13) நீயும் அன்ட்டோனியோவும் உண்மையில் அண்ணன் தம்பிகளல்லீர் என்று எண்ணினால், அது என் பாட்டியின் கற்பிற்கு இழுக்காகும். ஆகையால், நல்லவர் வயிற்றிலும் கெட்ட பிள்ளை பிறப்பதுண்டென்பதே இதற்கு அமைதி.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[75-வது பக்கத் தொடர்ச்சி]

இராவண மியற்றிய விராவண னியம்புவான்

சீலமில்லாச் சிந்தையால் நொந்திருந்த அடலரக்கன் இராவணன் இடமுங் காலமும் மாறியும் ஆறுத நோயை ஆற்றுதற்கு இனிப் பொருள்களில் கைவைக்கலாயினன்: வன்மையை மாற்றும் ஆற்றல் காமத்தே தங்கிற்றன்றி அக் காமநோயை மாற்றும் ஆற்றல் தண்மதி யனைய பொருள்களிலில்லையென்பதை ஓர்கிலாது,

நாரமுண் டெழுந்த மேகந்
தாமரை வளைய நாற
சாரமுண் டிருந்த சீத
சந்தனந் தளிர்மென் றாதோ
டாரமுண் டிருந்துஞ் சிந்தை
யயர்கின்றா னயனின் றாரை
ஈரமுண் டென்ப ரோடி
யிந்துவைக் கொணர்மி னென்றான்

[நீரைக்குடித்து எழுந்த மேகங்களும், தாமரையின் சுருள்களும்,பலவகை வாசனைச்சாரத்தைக்கொண்டிருந்த குளிர்ந்த சந்தனக் குழம்பும், தளிர்களும், மெல்லிய பூந்தாதுகளும், முத்துக்களும் ஆகிய இவைகளைத் தன்மேற் கொண்டிருந்தும் தாபந் தணியாமல் மனந்தளர்கின்றவனாகி, பக்கத்தில் நின்ற ஏவலாளர்களை நோக்கி, "குளிர்ச்சி உளது என்று சொல்வர், ஆகையால் ஓடிச்சென்று அச் சந்திரனைக் கொண்டுவாருங்கள் - என்றான்]

சந்தனமுந் மென்தளிரும் தாமரையும் தாளந்தானும் எரித்தவென்றால், இந்துவிற்கு ஈரமுண்டென் றெங்ஙனம் நம்புவான் இவ்விராவணன். எனினும், ஒருமுறை அதனையுஞ் சோதித்துத் தீர்வோம் என்பான்போல், "ஈரமுண் டென்பர், ஓடி இந்துவைக் கொணர்மின்" என்றனன். அவ்வளவில்,

வெஞ்சினத் தரக்க னண்ட வியனகர் மீது போது
நெஞ்சில னொதுங்கு கின்ற நிறைமதி யோனை நோக்கி
அஞ்சிலை வருதி நின்னை யழைத்தன னரசனென்னச்
சஞ்சலந் துறந்து தானச் சந்திர னுதிக்க லுற்றான்

[கொடிய கோபத்தையுடைய இராவணன் ஆண்ட பெரிய அந்த இலங்கை நகரின்மேல் வருவதற்கு மனந் துணியாமல் ஒருபுறத்தே அச்சமுடன் விலகிநிற்கின்ற பூரணசந்திரனைப் பார்த்து, "பயப்படாமல் வருவாயாக, அரசன் உன்னை அழைத்தான்" என்று ஏவலாளர் சொல்ல, அந்தச் சந்திரன் சஞ்சலம் நீங்கி உதிக்கலானான்]

ஆயினும் சந்திரன் அன்று தண்மையுடனன்றிவன்மமுடன் வந்தனன்.

அயிருறக் கலந்த நன்னீ
ராழியின் றாழி நீத்துச்
செயிருறக் கலந்த தாண்டோர்,
தேய்வுவந் துற்ற போது
வயிரமுற் றுடைந்து சென்றோர்
வலியவற் செல்லு மாபோல்
உயிர்தெறக் கால னென்பா
னொத்தன னுதயஞ் செய்தான்

[ஒருவனுக்குத் தோற்று அதனால் அவன்பால் தீராப் பகைமைகொண்டு போனவர்கள், அப்பகைவனிடத்தில் வருத்தம் மிகவுடைய ஒரு மெலிவுகாலம் விளைந்த சமயத்தில் முன் வலியவனாயிருந்த அவனை எதிர்க்கச் செல்வதுபோல், முன் திக்குவிஜயத்தில் இராவணனுக்குத்தோற்றுச்சென்ற சந்திரன், இப்பொழுது இராவணனுடைய உயிரை அழித்தற்கு வரும் எமனைப்போன்று, நுண்மணல் மிகப் பொருந்திய மிக்க நீரையுடைய கடலினின்று தன் மண்டலத்தைப் பரப்பித் தோன்றினான்]

அதுவு மன்றி,

பராவருங் கதிர்க ளெங்கும்
பரப்பிமீப் படர்ந்து வானில்
தராதலத் தெவரும் பேண
அவனையே சலிக்கு நீரால்
அராவணை துயிலு மண்ணல்
காலமோர்ந் தற்ற நோக்கி
இராவண னுயிர்மே லுய்த்த
திகிரியு மென்ன லானான்.

[புகழ்தற்கரிய சிறப்புவாய்ந்த தன் கிரணங்களை எங்கும் பரப்பி மேலே சென்று, விண்ணுலகத்திலும் இப்பூமியிலும் எவராலும் புறக்கணிக்கப்படுகின்ற அவ்விராவணனாகிய ஒருவனையே வருத்துகின்ற தன்மையால், ஆதிசேஷனாகிய படுக்கையில் அமர்ந்த திருமால் சமயம் பார்த்து இராவணன்மேல் செலுத்திய சக்கிராயுதத்தையும் போன்றவனானான் அச்சந்திரன்]

தண்மதி நிலவினுலும் இராவணன் உடலின் வெப்பந் தணிந்தபாடில்லை.

அருகுறு பாலின் வேலை
யமுதெலா மளைந்து வாரிப்
பருகினன் பரந்து பாய்ந்த
நிலாச்சுடர்ப் பனிமென் கற்றை
நெரியுறு புருவச் செங்கண்
அரக்கற்கு நெருப்பி னுப்பண்
உருகிய வெள்ளி யள்ளி
வீசினு லொத்த தன்றே.

[தனக்கு அருகிலுள்ள பாற்கடலின் அமிருதம் முழுவதையும் துழாவி எடுத்துக் குடித்துப் பரவிப்பாய்ந்த நிலவின் குளிர்ந்த மெல்லிய கற்றையானது, நெரித்த புருவமும் சிவந்த கண்களும் உடைய இராவணனுக்கு, நெருப்பின் நடுவே உருக்கிய வெள்ளியை அள்ளி இறைப்பது போன்று இருந்தது]

மின்னிலந் திரிந்த தன்ன விழுநிலா மிதிலை சூழ்ந்த
செந்நெலங் கழனி நாடன் திருமகள் செவ்வி கேளா
நன்னலந்தொலைந்துசோரு மரக்கனைநாளுந்தோலாத்
துன்னலனொருவன்பெற்ற புகழெனச்சுட்டதன்றே

[மின்னலானது பூமியில் உலாவியது போன்ற சிறந்த சந்திர கிரணமானது, அழகிய செந்நெற்கழனிகள்சூழ்ந்த மிதிலா நகரத்திற்கு அரசனுன சனகராஜனது அழகிய மகளான சீதையின் வடிவழகைச் சூர்ப்பணகையாற் கேட்டறிந்து, அந்தக் காமத்தால் தன் நலன்களெல்லாம் ஒழிந்து சோர்கின்ற இராவணனை, ஒருநாளுந் தோல்வி யடையாத ஒருபகைவன் பெற்ற புகழானது சுட்டது போல் சுட்டது]

எமன்போ லெழுந்து எம்பெருமான் திகிரிபோல் வந்து உருக்கிய வெள்ளிபோல் வீசிய அச் சந்திரன் றன் கிரணங்கள் தோலாதவெற்றிப் பகைவன் பெற்ற புகழேபோல் இராவணனைச் சுடுதலும், பொருள் நிலை தடுமாறி,

கருங்கழற் கால னஞ்சுங் காவலன் கருத் துநோக்கித்
தருங்கதிர்ச் சீத யாக்கைச் சந்திரற் றருதி ரென்ன
முருங்கிய தணலின் மூரிவிடத்தினை முகக்குஞ்சீற்றத்
தருங்கதிர ருக்கன்றன்னை யாரழைத் தீர்களென்றான்

[பெரிய வீரக்கழலையணிந்த யமனும் அஞ்சும்படியான இராவணன், தன் ஏவலாளர்களைப்பார்த்து, "என் எண்ணத்தை உணர்ந்து, அதற்கேற்க, இனிதாகக் கொடுக்கின்ற கிரணங்களோடு கூடிய குளிர்ந்த உடம்பையுடைய சந்திரனைக் கொண்டுவாருங்கள் என்று நான் கட்டளையிட்டிருக்க, எரிகின்ற நெருப்புடனே வலிய விஷத்தையுங் கொண்டுள்ள கோபத்தோடு கூடிய அரிய கிரணங்களையுடை சூரியனை எவர் அழைத்து வந்தவர்" - என்று வினவினன்]

கூதிரைச் சிசிரமென்றே முன்னிவன் சினந்தற்குக் கூறிய மாற்றம்போன்றே ஏவலாளர் இப்பொழுதும், விடைதந்து வந்தது, மதியமென்றே சான்றுடன் எதிருரைத்தார். அதன்மேல்,

பணந்தா மல்குற் பனிமொழியார்க்
கன்பு பட்டார் படுங்காமக்
குணந்தான் முன்ன மறியாதான்
கொதியா நின்றான் மதியாலே
தணந்தா மரையின் றனிப்பகைவ
னென்னுந் தன்மை யொருதானே
உணர்ந்தா னுணர்வுற் றவன்மேலிட்
டுயிர்தந் துய்க்க வுரைசெய்வான்

[பாம்பின் படம்போன்ற அல்குலையும் குளிர்ந்த சொற்களையு முடைய மாதர்களிடத்தில் ஆசைகொண்டவர் படுகின்ற காமநோயினது தன்மையை இதன்முன் அறிந்திராதவனும்இப்பொழுது சந்திரனல் மெய்கொதிக்கின்றவனும் ஆகிய இராவணன், குளிர்ந்த தாமரைக்கு ஓர் பகைவனன சந்திரனே என்பதை உணர்ந்தான், உணர்ந்து, தன் உயிரைக்கொடுத்து உதவும்படி அச்சந்திரன்மேல் வைத்துச் சில சொற்களைக் கூறினன்]

தேயா நின்றாய் மெய்வெளுத்தா
யுள்ளங் கறுத்தாய் நிலைதிரிந்து
காயா நின்று யொருநீயுங்
கண்டார் சொல்லக் கேட்டாயோ
பாயா நின்ற மலர்வாளி
பறியா நின்று ரின்மையால்
ஓயா நின்றே னுயிர்காத்தற்
குரியார் யாவ ருடுபதியே

[நக்ஷத்திரங்களுக்கு நாயகனை சந்திரனே, நீ உடம்பு மெலிகின்றாய், உடல் வெளுத்தாய், உட்புறங் கருத்தாய், உன் தண்ணிய நிலைமாறி இப்பொழுது அனல் காய்கின்றாய், சீதையின் அழகைக் கண்டவர்சொல்ல நீயும் என்னைப்போல், கேட்டாயோ! என் உடம்பில் தைக்கின்ற மலர்ப்பாணங்களைப் பிடுங்கியெடுத்துப்பாதுகாப்பவர் இல்லாமையால், ஒடுங்குகின்ற என்னுடைய உயிரைப் பாது காக்கவல்லவர் இனி யாவர்?]

ஆற்று ராகிற் றம்மைக்கொண்
டடங்கா ரோவென் னருயிர்க்குக்
கூற்றாய் நின்ற குலச்சனகி
குவளை மலர்ந்த தாமரைக்குத்
தோற்று யதனு னகங்கரிந்தாய்
மெலிந்தாய் வெதும்பத் தொடங்கினய்
மாற்றார் செல்வங் கண்டழிந்தால்
வெற்றி யாக வற்றாமோ.

[என் அருமையான உயிரிற்கு எமனய் நின்ற சிறந்த சீதையின், குவளைமலர்போன்ற கண்களையுடைய தாமரைமலர்போன்ற முகத்திற்கு நீ தோல்வியடைந்தாய், அதனல் உள்ளம் கருகினய், உடல் மெலிந்தாய், வெதும்பத் தொடங்கினய். பகைவருடைய செல்வத்தைக்கண்டு அழிந்தால் அது வெற்றிபெறுவதற்கு நிகராகுமோ! வெற்றிகொள்ள முடியாதெனின், தம் அறிவைக்கொண்டு அடங்கிவிட மாட்டரோ]

விளைகாம விதைக்கு எருவே யனைய மதியம் இன்று இவ்வண்ணம் இராவணனல் மதியுறுத்தப்பெற்றது. கண்ணுற் காண்டலினும் பெரியதோ, கண்டார் சொல்லக் கேட்டதால் கதுவிக்கொள்ளும் ஒரு காமம்! ஓரானேனும், பின்வரு விளைவை நோக்கின், "என் ஆருயிர்க்குக் கூற்றாய் நின்ற குலச்சனகி" என உண்மையே உரைத்துவிட்டான், தான் இராவணம் இக் காமத்தைக் கைக்கொண்ட இராவணன்.

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

பொதிகை நிகண்டு

(இரண்டாம் பகுதி)

[77-வது பக்கத் தொடர்ச்சி]

இகராதி.

255 இகரமோ ரெழுத்துஞ் சந்தமு மாகும்.
256 இகல னரியு மோரியு மாகும்.
257 இருத்தல் துடைத்தலும் வீழ்த்தலு மீர்தலும்
இளைத்தலுஞ் செகுத்தலு மருந்து வித்திடலும்
[1]அழைத்தலுந் தாழ்த்தலு மிரிதலு மீவும்
258 இகத்தல் புடைத்தலும் நெருக்கமுங் காழ்த்தலும்
கடத்தலு மியங்கலுங் கழறலாகும்.
259 இகுரி வழக்குந் தோணியு மாகும்.
260 இக்குக் கரும்புங் கள்ளு மாகும்.
261 இகுளை தோழியும் நட்பு மாகும்.
262 இகல்பகையும் வலியும் பொருதலு மாகும்.
263 இங்குப் பெருங்காயமு மிவ்விடமு மாகும்.
254 இசித்தல் ஒசிவு மிறுத்தலு மாகும்.
265 இசையுரைச் சொல்லும் பொன்னும் புகழும்
திசையும் வண்மையும் பண்பும் பாட்டும்
இனிமையு மெனவே யியம்ப லாகும்.
266 இச்சை யாசையும் பொய்த்தலு மிடித்தலும்
அஞ்ஞா னமுமென வறைய லாகும்.
267 இஞ்சி கோட்டையு மிஞ்சியு மாகும்.
268 இடிநென் மாவு முறுதிச் சொல்லும்
தகரமுஞ் சுண்ணமு மிடியேறு மாகும்.
269 இடையோ ரிடையு மாயரும் நுசுப்பும்
நடுவு மிடமும் சிறையும் யானையும்.
270 [2] இடபமரக் கொம்பு மேறு மிராசியும்
கிம்புரி யுமெனக் கிளத்த லாகும்.
271 இடங்கர் குடமு முதலையுந் தூர்த்தரும்.
272 இடமிடப் புறமு மிடமுஞ் செல்வமும்
விசாலமும் வாமமும் விளம்ப லாகும்.
273 இடித்த லிடித்தலு முறுதிச் சொல்லும்.
274 இடக்கரே குடமு மறைச்சொல்லு மாகும்.
275 இடைதல் சிலையுந் துன்பமு மாகும்.
276 இணையீ ரோதியு மொப்பும் பனிச்சையும்
இரண்டு மெனவே யியம்ப லாகும்.
277 இண்டை வனசமு மீங்கையு மாகும்.
278 இணர்பூங் கொத்தும் பூவு மாகும்.
279 இதழ்பூ விதழு மேடு முதடும்.
280 இதைபுதுப் புனமுந் தோணிப் பாயும்
நாஞ்சிலு மெனவே நவில லாகும்.
281 இதல்கவு தாரியுஞ் சிவலு மாகும்.
282 இதியே பேயு மிறுதியு மாகும்.
283 இந்தன மெரியிடு கனலும் விறகும்
இசையும் புகையு மியம்ப லாகும்.
284 இந்து சந்திரனுங் கரடியும் யானையும்.
285 இபமரக் கோடும் யானையும் வார்த்தையும்.
286 இமிழே யிசையு மினிமையு மாகும்.
287 இம்மி [3] பொன்மையும் புலமு நுண்மையும்.
288 இமையே யெண்குஞ் சிகியு மிமையும்.
289 இயலியலுஞ் சாயலும் நடையுந் தமிழும்.
290 இயவை வழியுங் காடு மூரும்.
291 இயறல் முத்தியும் போதலு மாகும்.
292 இயமீ வார்த்தையும் பறையு மொலியும்.
293 இயம்பல்பழி மொழியுஞ் சொல்லலு மாகும்.
294 இரணம் பொன்னுங் கடனு மாணிக்கமும்
அரவு மிகலு மறைய லாகும்.
295 இருள்கறுப்பு நிசியும் யானையு மையலும்
நரகமு மெனவே நவில லாகும்.
296 இரசதம் வெள்ளியுங் காஞ்சியு மாகும்.
297 இருவி தினைத்தாளு மிருவியு மாகும்.
298 இரலை யூதுகொம்புங் கலையு மசுபதியும்.
299 இராக முடுகியலுஞ் செம்மையு மிச்சையும்
கீதமு மெனவே கிளத்த லாகும்.
300 இருமை பெருமையு மிம்மையு மறுமையும்.
301 இராசியம் யோனியு மறைவு மாகும்.
302 இருசு செவ்வையும் பண்டியு ளிரும்பும்.
303 இரதி பிடியானையும் மன்மதன் றேவியும்
பித்தளையு மாசையும் பேச லாகும்.
304 இரவி சூரியனும் வாணிகமு மலையும்.
305 இரங்க லோசையு மிரங்கலு மாகும்.
306 இரவே யிரத்தலு மிரவு மாகும்.

(பி-ம்) [1] அவிர்தலும்
(பி-ம்) [2] இடபங்
(பி-ம்) [3] பொய்யும் புலனு முண்மையும்

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

பாதாமி லேகியம்	ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0
குழந்தைகளுக்கு	
ஸ்ரீகா கஸ்தூரி மாத்திரை	0-4-0
பால சஞ்சீவினி	0-4-0
பால ஸுதா (டானிக்)	1-0-0

தைலங்கள்:

சந்தனாதி 6 அவுன்ஸ்	ரூ. 1-0-0
அமிர்தாமலக ,,	0-12-0
பிருங்காமலக ,,	0-12-0
ஸ்திரீகளுக்கு	
ஸுதக டானிக்	2-0-0
கர்ப்பாசய டானிக்	2-0-0
ப்ரஸவ லேகியம்	1-8-0

300 போலிகள் மொத்தம். ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்போடி
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. 61, மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

ம.ட.ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக்

[பல்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

யாப்பிலக்கணம்

[67-வது பக்கத் தொடர்ச்சி]

தொடை

முன்னிதழில் அடிமோனை முதலிய ஐந்து தொடைகளைப் பற்றிய இலக்கணத்தைக் கற்றோம். இவ்விதழில் அடிமோனைத் தொடைக்கும் அடி எதுகைத் தொடைக்கும் அமைந்த சிறப்பிலக்கணத்தைக் கற்போம்:

வருக்க எழுத்தும், நெடிலெழுத்தும், இனவெழுத்தும் மோனையும் எதுகையுமாய் வரின், முறையே வருக்கமோனை, நெடில் மோனை, இனமோனை எனவும்; வருக்க எதுகை, நெடில் எதுகை, இன எதுகை எனவும் வழங்கப்படும்.

வருக்க எழுத்தாவன அம்முதல் ஔ வரையிலுள்ள உயிரெழுத்துகளும், கம்முதல் னௌ வரையிலுள்ள உயிர்மெய் யெழுத்துகளுமாம்.

இனவெழுத்தென்பன வல்லினம், மேல்லினம், இடையினம் என்னும் மூன்றுமாம். க, ச, ட, த, ப, ற என்னும் ஆறு வல்லெழுத்தும் தம்முள் ஒன்றிற்கொன்று இனமெனவும்; ங, ஞ, ண, ந, ம, ன என்னும் ஆறு மெல்லெழுத்தும் தம்முள் ஒன்றிற்கொன்று இனமெனவும்; ய, ர, ல, வ, ழ, ள என்னும் ஆறு இடையெழுத்தும் தம்முள் ஒன்றிற்கொன்று இனமெனவும் கொள்ளப்படும் என அறிக.

வருக்க மோனை

"பகலேபல் பூங்கானற் கிள்ளை ஒப்பியும்
பாசிலைக் குளவியொடு கூதாளம் விரைஇப்
பின்னுப்பிணி யவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
பீர்ங்கப் பெய்து தேம்படத் திருகிப்
புனையீ ரோதி செய்குறி நசைஇப்
பூந்தார் மார்ப! புனத்துட் டோன்றிப்
பெருவரை யடுக்கத் தொருவே லேந்திப்
பேயு மறியா மாவழங்கு பெருங்காட்டுப்
பைங்கண் உழுவைப் படுபகை வெரீஇப்
போங்குசினந் தணியாப் பூழுத லொருத்தல்
போகாது வழங்கு மாரிரு ணடுநாள்
பௌவத் தன்ன பாயிரு ணீந்தி
இப்பொழுது வருகுவை யாயின்
நற்றார் மார்ப! நீண்டலெங் கதுப்பே."

(இச்செய்யுளில் முதற் பன்னீரடியிலும் பகரமெய் வருக்க மோனை அமைந்துள்ளமை காண்க. இங்ஙனமே மற்ற மெய் வருக்கங்களுக்கும் கொள்க.)

அன்பின் மிக்க அருங்குணப் பெரியீர்!
ஆயிரத் துத்தொள் ளாயிரத் தோடே
இருபதோ டிலகு மொருபத்து மூவாண்(டு)
ஈண்டுப் பிறந்ததா லின்பம் பயக்க
உற்றநல் லாண்டி னுமக்குறு நலங்கள்
ஊற்றுநன் னீர்போ லேற்றமுற் றிலங்குக.
எழிலுந் தொழிலு மியலுஞ் செல்வமும்
ஏதமி லின்பமு மென்றுநீர் பெறுக.
ஐயன தருளால் வையந் தன்னில்
ஒன்றிய நம்புக ழுத்தமர் புகழ்போல்
ஓங்கசும் மிடையே யுறுநட் போங்குக.
ஔவிய நம்மை யணுகா தொழிகவே.

(இச்செய்யுளில் உயிர் வருக்க மோனை அமைந்திருத்தல் காண்க.)

நெடில் மோனை

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லா
மோதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை."

(இச்செய்யுளின் அடிகளில் முதலிலுள்ள ஆ, மோ என்னுமெழுத்துகள் ஒன்றுவாயினும் மோ என்னும் உயிர்மெய்யெழுத்திலுள்ள ஓ என்னும் நெடில் ஒப்புமை நோக்கி நெடில்மோனை என வழங்கப்படும்.)

வல்லின மோனை

"கயலே ருண்கண் கலுழ நாளும்
சுடர்புரை திருநுதல் பசலை பாயத்
திருந்திழை யமைத்தோள் அரும்பட ருழப்பப்
போகல் வாழி யைய! பூத்த
கோழுங்கொடி யணிமலர் தயங்கப்
பெருந்தண் வாடை வருஉம் பொழுதே."

(இச்செய்யுளில் அடிதோறும் முதற்கண் வல்லெழுத்தமைந்து, வல்லினமோனை ஆயினமை காண்க.)

மெல்லின மோனை

மாலை மதியம்
ஞாலந் தெளிய
நீல நெடுவான்
மேலுந் திகழும்.

(இச்செய்யுளில் அடிதோறும் முதற்கண் மெல்லெழுத்தமைந்து மெல்லினமோனை ஆயினமை காண்க.)

இடையின மோனை

வளவன்போன் மிக்க வளநிதிதாம் பெற்றிருந்தும்
யாரேயிம் மண்ணினுய்ந் தார்.

(இச்செய்யுளில் இடையின மோனை அடி முதற்கண் அமைந்திருத்தல் காண்க.)

வருக்க எதுகை

"தோடு மல்கு சுரும்பணி கோதையார்
கோடி மென்றுகிற் சுய்யத் தடம்படிந்
தாடித் தன்னனை யாமையிற் பூமகள்
ஊட லுற்றிடம் பார்த்துள ளாயினுள்."

(இச்சூளாமணிச் செய்யுளில் டு, டி, டி, ட என டகரமெய் வருக்க எதுகை அமைந்துள்ளமை காண்க.)

நெடிலெதுகை

"ஆவா என்றே யஞ்சின ராழ்ந்தார்—ஒருசாரார்;
கூகூ என்றே கூவிளி கொண்டார்—ஒருசாரார்;
மாமா என்றே மாய்ந்தனர் நீந்தார்—ஒருசாரார்;
ஏகீர் நாகீர் என்செய்தும் என்றார்—ஒருசாரார்"

(இச்செய்யுளில் வா, கூ, மா, கீ என்னும் சீரின் இரண்டாமெழுத்துகள் ஒன்றுவாயினும், அவற்றின் மேல் ஏறியுள்ள நெடிலின் ஒப்புமை நோக்கி நெடில் எதுகை என வழங்கப்படுமென அறிக.)

வல்லின எதுகை

"தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்."

(இக்குறளில் க், ச் என்னும் வல்லெழுத்துகள் தம்முள் ஒன்றற்கொன்று எதுகையாய் வல்லின எதுகை என வழங்குதலறிக.)

மெல்லின எதுகை

"அன்பீனும் ஆர்வம் உடைமை; அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு."

(இச்செய்யுளில் ன், ண் என்னும் மெல்லின மெய்கள் தம்முள் ஒத்து, மெல்லின எதுகை ஆயினமை காண்க.)

இடையின எதுகை

"எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு."

(இச்செய்யுளில் ல், ய் என்னும் இடையின மெய்கள் தம்முள் ஒத்து, இடையின எதுகை ஆயினமை அறிக.)

ஒருசார் ஆசிரியர் மோனை எதுகைகளை முறையே தலையாகு மோனை, இடையாகு மோனை, கடையாகு மோனை எனவும்; தலையாகு எதுகை, இடையாகு எதுகை, கடையாகு எதுகை எனவும் வழங்குவர். அவை பின் வருமாறு:—

தலையாகு மோனை

அடிதோறும் முதற்சீர் முழுவதும் மோனை ஒன்றி வருவது தலையாகு மோனையாம்.

உ-ம்:—"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

இடையாகு மோனை

அடிதோறும் முதலெழுத் தொன்று மட்டும் மோனை ஒன்றி வருவது இடையாகு மோனையாம்.

உ-ம்:—"மாவும் புள்ளும் வதுவையிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடை
மாயோள் இன்னுயிர்ப் புறத்திறுத் தற்றே."

கடையாகு மோனை

வருக்க மோனை முதலாகப் பிற வழியால் வருவன கடையாகு மோனையாம்: இதற்கு உயிர் வருக்க மோனைக்கும் மெய் வருக்க மோனைக்கும் உதாரணமாகக் காட்டிய செய்யுட்களையே உதாரணமாகக் கொள்ளலாம்.

தலையாகு எதுகை

அடிதோறும் முதற்சீர் முழுதும் எதுகை ஒன்றி வருவது தலையாகு எதுகையாம்:

உ-ம்:—"சிலைவிலங்கு நீள்புருவம் சென்றொசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாள்-மலைவிலங்கு
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போது."

இடையாகு எதுகை

அடிதோறும் இரண்டாமெழுத்து மட்டும் ஒன்றி வருவது இடையாகு எதுகையாம்:

உ-ம்:—"அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே யுலகு."

கடையாகு எதுகை

வருக்க எதுவகை முதலாகப் பிறவழியால் வருவன கடையாகு எதுகையாம்:

உ-ம்:—"தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப்படும்."

இக்கூறப்பட்ட எதுகைகளே யன்றி, உயிரெதுகை, ஆசெதுகை, இடையிட்டெதுகை, இரண்டடி எதுகை, மூன்றும் எழுத்தொன்றெதுகை எனப் பிற எதுகைகளும் வழங்கும். ஆயினும், அவை சிறப்புடையன அல்ல. அவை பின் வருமாறமையும்:

உயிரெதுகை

"துளியொடு மயங்கிய தூங்கிருள் நடுநாள்
அணிகிளர் தாரோய்! அருஞ்சுரம் நீந்தி
வடியமை எஃகம் வலன்வயின் ஏந்தித்
தனியே வருதி நீயெனின்
மையிருங் கூந்தல் உய்தலோ அரிதே."

(இச்செய்யுளில் ளி, ணி, டி, னி, யி என்னுமெழுத்துகள் ஒன்றுவாயினும், அவற்றின்மே லேறிய உயிர் ஒன்றி வந்தமையால், உயிர் எதுகையாம்.)

ஆசு எதுகை

"காய்மாண்ட தெங்கின் பழம்வீழக்
கமுகின் எற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி,
வருக்கை போழ்ந்து,
தேமாங் கனிசிதறி வாழைப்
பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையால்
திசைபோய துண்டே."

(இச்செய்யுளில் முதலடியில் ய் என்னும யகர ஒற்று இடை வந்த ஆசெதுகை காண்க. ய், ர், ல், ழ் என்னும் நான்கு மெய்யும் ஆசாய் வருமென அறிக.)

"மாக்கொடி யானையும் மௌவல் பந்தரும்
கார்க்கொடி முல்லையும் கலந்து நின்றன."

(இதில் இரண்டாமடியில் ர் என்னும் ரகர ஒற்று இடை வந்த ஆசெதுகை காண்க.)

"ஆவே றுருவின வாயினும் ஆபயந்த
பால்வே றுருவினவா கா."

(இதில் இரண்டாமடியில் ல் என்னும் லகர ஒற்று இடை வந்த ஆசெதுகை காண்க.)

"வாழ்கின்றே மென்று மகிழன்மின் வாணாளும் 18|9|38
போகின்ற பூளையே போன்று."

(இதில் முதலடியில் ழ் என்னும் ழகர ஒற்று இடை வந்த ஆசெதுகை காண்க.)

இடையிட்டெதுகை

"தோடா ரெல்வளை நெகிழ நாளும்
நெய்தல் உண்கண் பைதல் உழல்க
வாடா வவ்வரி புதைஇப் பசலையும்
வைகல் தோறும் பைபயப் பெருகி
நீடார் இவரென நீண்மனங் கொண்டார்
கேளார் கொல்லோ காதலர் தோழி!
வாடாப் பௌவ வறன்முகந் தெழிலி
பருவம் பொய்யாது வலனேர்பு வளைஇ
ஓடா மலையன் வேலிற்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே."

(இதில் எதுகை அடிதோறும் இடையிட்டு வந்தமையால், இடையிட் டெதுகை யாயினமை காண்க.)

இரண்டடி எதுகை

"துவைக்கும் துளிமுந்நீர்க் கொற்கை மகளிர்
அவைப்பதம் பல்லிற் கழகொவ்வா முத்தம்
மணங்கமழ்தார் அச்சுதன் மண்காக்கும் வேலின்
அணங்கும் அமுதமும் அங்கலார் பாடல்."

(இதில் முன்னிரண்டடியும் ஒரெதுகையாயும், பின்னிரண்டடியும் மற்றோரெதுகையாயும் வந்தகையால் இரண்டடி எதுகையாயினமை காண்க.) மோனையும் இரண்டடி மோனை கொள்வர்:

"ஆகங் கண்டக ராலற்ற ஆடவர்
ஆகங் கண்டகத் தாலற்ற அன்பினர்
பாகங் கொண்டு பயோதரம் சேர்த்தினர்
பாகங் கொண்டு பயோதரம் நண்ணினர்."

என்னுஞ் செய்யுள் அதற்குதாரணமாம்.)

மூன்றுமெழுத்தொன்று எதுகை

"பவழமும் பொன்னுங் குவைஇய முத்தின்
திகழரும் பின்றன புன்னை."
"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்."

(இவற்றில் மூன்றும் எழுத்து ஒன்றி வந்திருத்தல் காண்க.)

இனி, விட்டிசை மோனை என்றும், விட்டிசை வல்லொற்றெதுகை என்றும் வேண்டுவாரும் உளர். எனினும் அவை சிறப்பில.

விட்டிசை மோனை

"அஅவனும் இஇவனும் உஉவனும் கூடியக்கால்
எஎவனை வெல்லார் இகல்."

விட்டிசை வல்லொற்று எதுகை

"பற்றிப் பலகாலும் பான்மறி யுண்ணுமை
றொஅலையல் நின்னுட்டை... டீ."

(இது வல்லொற்றடுத்தாற்போல விட்டிசைத்துக் குற்றெழுத்தொடு புணர்ந்தமையால் விட்டிசை வல்லொற்று எதுகையாம்.)

அலங்கோல வெண்பா

அன்புவழி போலோ ரவலங் கடைப்பிடித்தார்
இன்பவழிக் கெங்கே யிடமினித்தான்—தின்பதின்மேற்
காமம் திளைப்பதினுங் காமமே கண்ணுனர்
சேம நெறியெல்லாம் செகுத்து. 1.

செய்யுங் கடமைகளைச் செப்பமுறக் காணுதே
வைப முரிமைக்கா வாய்திறக்கும்—ஐயகோ
மூல மறியார் முடிவுதனை மேற்கொண்டார்
கோலமலங் கோலமாக் கொண்டு. 2.

தங்கடமை தாங்கார் தாழ்ந்து பிறர்க்குறாஉம்
பொங்குரிமை வெஃகியுளம் பொச்சாப்பார்—நங்காய்
உரிமையிலுந் தோன்று முயர்கடமை மற்றுப்
பெருமை கடமையிலும் பேண். 3.

கலையழகு செய்யுங் கருத்தழகு காணு
தலைவதழ காமோ வகத்தில்—மலையளவா
வெண்ணெ யிருக்கத்தான் வீணுக நெய்வேண்டிக்
கிண்ணமெடுத் தெங்கே கிறீர். 4.

பொதுவறப் புரத்தல் புகழ்சால் வரிசை
முதியாரைத்தந் தாக்கு முறையால்—இதுவென்
சிறப்பியல்க ளெல்லாம் சிதைக்குங் கருமம்
அறப்பெரியோ ராற்றுகின்ற வா. 5.

சாதி கலப்பால் சமைத்தருந்துஞ் சாப்பாட்டால்
நீதி சமதருமம் நின்றிடுமோ—பேதமின்றி
வாய்வைத்த மக்கள் தமக்குள் வழக்கிலையோ
தாய்முலையி லாச்சோ தவறு. 6.

கன்னிமணம் வேண்டா கலப்பு விதவைமணம்
இன்னுமே தேதோ திருத்தங்கள்—பன்னிலவை
சாமிசம யங்கள் சமயகுரு சாதிதரும்
நாமெலாம் நாசம் நகைப்பு. 7.

பேணும் பிரம சரியம் பிழைத்தொழுகிற்
காணும் விதவைமணம் காப்பாமோ—நாணகலத்
தும்பைவிட்டு வாலைத் தொடர்ந்தா லறிவாமோ
தம்பியர்காள் சொல்வீர் தணிந்து. 8.

தேறுந் தெரிவையரைத் தேர்ந்தக்கா லம்மணந்தான்
ஏறுமா றுக இயலாதோ—வேறுவேறு
சாதிமண மென்சிறப்புத் தம்பதிக ளாணொடுபெண்
பேதப் பிறப்பலவோ பின். 9.

மாட்டுணவு கொள்ளும் மனித்தரொடு மாதவரும்
கூட்டுணவு கொண்டு குலவுகின்றார்—காட்டும்
சுதந்திரஞ்ச கோதரத்வம் தன்னுசுய ராஜ்யம்
மிதந்துவரக் காண்பமினி மேல். 10.

விபசாரிக் கேய்ந்த விடுதியென்பார் தாந்தம்
அபசார மாவ தறியார்—உபசாரம்
கோயிற் கதவம் குறைந்த குலத்தவர்க்கேன்
வாயில் திறந்த வழி. 11.

ஆலயத்துக் குள்ளே அரிஜனங்கள் புக்குதொழ
வேலையற்றான் சீர்திருத்தம் வேண்டுவதோ—கோல
மதிகலங்கி யெங்கள் மனங்கலக்க வேண்டா
விதிகலக்கப் போவீர் வெகுண்டு. 12.

திருக்கோ யிலுக்குள் திருக்குலத்தா ரெல்லாம்
திருக்கோலங் கொண்டு திகழ்ந்தால்—இருக்காதோ
தீண்டாமைத் தீப்பிணிதான் தென்னுலி ராமன்கதை
பூண்டஉரி தென்னே புரிந்து. 13.

கிடப்பனகி டக்கக் கிழவி மணைமேல்
எடுத்தமர்த்தென் பார்கதைபோ லெல்லாம்—கிடக்க
சமயசு தந்திரத்துட் கைவைத்துஞ் சாத்தான்
அமர்ந்தவரா சாட்படுத்தி ரால். 14.

விஞ்ஞானம் போலோர் விபரீதப் பாய்ச்சலினல்
மெய்ஞ்ஞானம் தன்னை மிரட்டிவிட்டார்-அஞ்ஞா
பொங்குங் கடலை விளாவப் புதுப்புனலோ [னம்
அங்கவ் வடவை யழல். 15.

விண்ணுறில் வேக வளிமிதவை யெந்திரங்கண்
டண்ணுந்து பார்த்திங் கடிசறுக்கும்—விண்ணுளப்
பேச்சுப் பழகிவிட்டோம் பேதைமையா மாழ்கடலை
நீச்சுப் பழக நினைந்து. 16.

வான்குருவி யின்கூடு வல்லவர்க்குஞ் செய்யரிது
நாங்கடவ தெங்கன் நமரங்காள்—ஏன்புரியும்
ஏற்றதொழி லெல்லாம் இடைவிட்டு மேற்பறக்கும்
காற்றின்மே லேறும் கருத்து. 17.

உள்ளுங்கா லெல்லா முயர்வுள்க வென்றறைந்தார்
கொள்ளத்தான் வேண்டுங் குறியுமதே—தள்ளும்
திரிசங்கு சொர்க்கம் சிறப்போதான் கொண்ட
புருஷனைப் போக்கடித்தாள் போல். 18.

கள்ளை மறுத்தொழித்தோம் கத்த ரெடுத்துடுத்தோம்
துள்ளுசட்ட மெல்லாந் தொலைத்தொழித்தோம்கொள்ளை
திருக்குலத்தார்க்கெங்களுடைத் தேவுதெரிவித்தோம்
தெருக்கதவங் கோயில் திறந்து. 19.

நிழல்போற் றழீஇ நிழற்றன்மற் றல்லால்
குழல்முழவப் பாட்டுங் குழலும்—சுருதி
அளந்தாய்ந்த யுக்தி அநுபவங்க ளெல்லாம்
உளந்தெளிந்து நீயுணர்ந்து கொள். 20.

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றொகுதி நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அநுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-0

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

கம்பராமாயணம்—யுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு 0-12 0

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களை யுடையது தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனுர் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L., விலை அணு 0-6-0

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

திராவிடப் பிரகாசிகை

இந்நூல் தமிழின் மாட்சியையும் அதன் இலக்கண இலக்கியங்களின் விவரங்களையும், தமிழின் தெய்வப் பழமை மரபியல், ஒழிபியல் இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், என்னும் ஐம்பெரும பகுதிகளால் நன்கு விளக்குவது. சமீபகாலத்திற் றோன்றிய "தென்மொழி வரலாறு," "தமிழ் வரலாறு" முதலிய புதுநூல்களுக்கு வழிகாட்டியாயுள்ளது. தமிழ்ப்பண்டிதர்களுக்கும், மாணவர்களுக்கும் நற்பயன் விளைக்கக் கூடியது. புத்தகசாலை, வாசக சாலைகளுக்கும் இன்றியமையாதது. இது, திருவாவடுதுறையாதீன மகாவித்துவானுய் விளங்கிய யாழ்ப்பாணத்து வடகோவை-சபாபதி நாவலரவர்களால் இயற்றப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு அழகு பெற டெம்மி எட்டுப்பக்கங்கொண்ட ரு பாரங்களாக நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. இப்பதிப்பின் விசேஷங்கள்:—தமிழ் ஆங்கில முன்னுரை, நூலாசிரியர் சரித்திரம், மேற்கோள் விளக்கம், கடினசந்தி நீக்கம், அச்சுப் பிழையின்மை முதலியன. வேண்டுவோர் கீழ்க்குறித்த விலாசங்களுக்கு எழுதவும்:— விலை ரூ 3-8-0.

1 காரியதரிசி, மலைய சைவசித்தாந்த சங்கம், துவாலாலம்பூர்.
2 சோதிடவிலாச புத்தகசாலை, கோக்குவில் யாழ்ப்பாணம்.
3 சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை,

ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM c. c. s.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European. Professor S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

PRICE Rs. 5-8-0.

KALANILAYAM
Purasawalkam, Madras.

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லேதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். ஏழெட்டெணக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

கலாநிலய இலவசத் தமிழ்க் கழகம்:—கம்பராமாயணம், மணிமேகலை, சிலப்பதிகாரம் அனைய தமிழ் நூல்களைத் தாமே படித்து இன்புறுவதற்கு வேண்டிய பயிற்சியை 18 மாதங்களில் பெறுவதற்கான முறையில் செய்விக்கும்பொருட்டுக் கீழ்க்கண்டவிடங்களில் கலாநிலய இலவசத் தமிழ்க் கழகங்கள் நிறுவப் பெற்றிருக்கின்றன:-

1. பிரம்பூர், கலவல கண்ணன்செட்டியார் உயர்தரப் பாடசாலைக் கட்டிடத்தில் திங்கள் வியாழக் கிழமைகளில் மாலை 6-30 முதல் 7-15 வரையில் நடைபெறுகின்றது.

2. பிரம்பூர், பாரக்ஸ் கார்ன்பக் இந்திய கிளப் கட்டிடத்தில் புதன் சனிக் கிழமைகளில் மாலை 7-15 முதல் 8 வரையில் நடைபெறுகின்றது.

3. வண்ணாரப்பேட்டை ராபின்ஸன் பார்க்கிற்கு அருகிலுள்ள முனுசாமி செட்டியார் கார்டன் 3-வது சந்திலுள்ள தனலக்ஷ்மி பாடசாலையில் புதன்கிழமை மாலை 6-30 முதல் 7-30 வரையிலும் ஞாயிற்றுக் கிழமை காலை, 8மணிமுதல் 9மணிவரையிலும் நடைபெறுகின்றது.

4. சென்னை எஸ்பிளனேட் கிறிஸ்தியன் காலேஜ் கட்டிடத்தில் செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் மாலை 5-30 முதல் 6-15 வரையில் நடைபெறுகின்றது.

5. இராயப்பேட்டை அம்மையப்ப முதலி தெருவிலுள்ள கார்ப்பொரேஷன் பள்ளிக்கூடக் கட்டிடத்தில் செவ்வாய் வெள்ளிக் கிழமைகளில் மாலை 6-45 முதல் 7-30 வரையில் நடைபெறுகின்றது.

6. சிந்தாதிரிப்பேட்டைப் பாலத்திற்கு அருகிலுள்ள கார்ப்பொரேஷன் மாடல் ஸ்கூல் கட்டிடத்தில் செவ்வாய் சனிக் கிழமைகளில் மாலை 6-30 முதல் 7-15 வரையில் நடைபெறுகின்றது.

7. மாம்பலம் தியாகராஜ நகரிலுள்ள கார்ப்பொரேஷன் மாடல் ஸ்கூல் கட்டிடத்தில் வியாழன் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 7-15 முதல் 8 வரையில் நடைபெறுகின்றது.

மேற்கூறிய இக்கழகங்கள் நம் **கலாநிலய இலக்கிய வாரப் பத்திரிகையின் ஆதரவில் இலவசமாய்** நடைபெறுகின்றன. அவரவர் வசிக்குமிடத்தையும் உத்தியோகம் புரியுமிடத்தையும் அனுசரித்து அக்கழகங்களில் **எதனில் வேண்டுமானாலும் சேரலாம்.** நம் கலாநிலயச் சந்தாநண்பர்கள், ஆங்காங்குள்ள தம் நண்பர்கள் அனைவரும் இக்கழகங்களில் வந்து சேரும்படி உதவுமாறு வேண்டிக் கொள்கின்றோம். ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B. A. B L. அட்வகேட் அவர்களும், கலாநிலயம் உதவி ஆசிரியர் ஸ்ரீமான் K. இராஜகோபாலன் அவர்களும் இக்கழகங்களில் பாடம் நடத்துவார்கள்.

***

இரசாயன சாத்திரவளர்ச்சி:—அமெரிக்காவிலுள்ள ரசாயன சாஸ்திரிகள் இரசாயன முறையில் ஆடு, மாடு, கோழி முதலியவைகளின் மாமிசங்களைப்போலவே செய்யக்கூடிய வழியைக் கண்டுபிடித்து வருகின்றனர். இப்பொழுது அமெரிக்காவிலுள்ள ராக்பெல்லர் என்னும் அமெரிக்கச் செல்வருடைய ரசாயன சாலையில் கோழியின் மாமிசம்செய்து விட்டனராம். இதனால் ஜீவ ஹிம்சை குறையுமென்று ஓராசிரியர் மகிழ்கின்றார்.

ஆயுளை வளர்க்க முயற்சி:—மேல்நாடுகளைக் காட்டிலும் இந்தியர் இளவயதில் இறந்துவிடுகின்றனர் என்றும், இந்தியர் மரண விகிதம் குறைவதற்குரிய வழிகளை நாடவேண்டுமென்றும் உணவுக் குறைவை தீர்க்கவேண்டுமென்றும் பலர் எழுதியும் பேசியும் வருகின்றார்கள். நாம் ஏன் அதிகநாள் வாழவேண்டுமென்பதைத் தீர்மானம் செய்தபிறகன்றோ ஆயுளை வளர்க்கும் விஷயத்தில் நாட்டம் செலுத்தவேண்டும் என்று கலாநிலயம் கூறுவதுண்டு. இது பற்றி இமயமலையில் ரிஷிகேசத்தில் தவம்புரியும் ஸ்வாமி சிவத்தியானாநந்தர் பின்வருமாறு கூறுகின்றார்:—

"ஆலமரம் ஆயிரம் வருஷம் வாழ்கின்றது. ஒரு மூடனும் எண்பது வருஷம் உயிர் வாழ்கின்றான். ஒரேவகை உணவு உண்டு, ஒரேவகை நீரருந்தி, ஒரு மாதிரியான பயனற்றபேச்சைப் பேசிக்கொண்டு, கடவுள் பக்தியும், ஆன்ம நினைவும் இன்றி ஒரு சுமை தூக்கும் கழுதையைப் போல், மனிதன் வாழ்கின்றான். இப்படிப் பூமிக்குப் பாரமாய் இருப்பதைக் காட்டிலும் அவன் இளமையில் இறப்பது நல்லதன்றோ. வாழ்வின் பயன் என்ன வென்று தெரிந்து வாழ்பவனே வாழ்வின் நீளத்தைப் பற்றிக் கவலை யடைய வேண்டும்"

சராசரிக் கணக்குப் போட்டு, நீண்டஆயுள் வளர்ப்பதற்கு உணவு முதலிய முறைகளை வகுப்போர் அப்பெரியாரின் மொழியைப்பற்றிச் சிறிது கவனம் செலுத்துதல் நலம்.

***

விவசாயக் குருகுலம்:—தஞ்சை ஜில்லாவில் மன்னார்குடித் தாலுக்காவிற்கு அருகிலுள்ள வடுவூர் என்னுமிடத்தில் விவசாயகுருகுலம் ஒன்[illegible] ஸ்தாபிக்க ராவ் சாகிப் S. V. கனகசபைப்பி[illegible]ளையவர்கள் முயன்று வருகின்றனராம். இங்குச் சிறுவர்களுக்கு விவசாயக் கல்வி தரப்படும் என்று தெரிகின்றது.

***

ஓர் ஆசிரியர் வருத்தம்:—பாரசீகத்திலுள்ள முனிசிபாலிட்டியார், அவ்வவ் முனிசிபாலிட்டியின் கீழுள்ள விடங்களில் பின்வரும் உத்திரவு பிறப்பித்துள்ளார்களாம்:—"வியாபார ஸ்தலங்களில் போடப் பெறும் போர்டுகள் பாரசீக பாஷையிலே இருக்க வேண்டும். மற்றப் பாஷையிலும் எழுத வேண்டிய அவசிய மிருக்குமாயின் பாரசீக பாஷையின்கீழ்ச் சிறிய எழுத்தில் எழுதிக்கொள்ளலாம்."

இப்படிப் பாரசீக வாசிகள் தேசீய உணர்ச்சி பெற்று வளர்ந்துவருகின்றார்கள் என்றும் இந்தியர் அன்னிய பாஷையிலேதான் இன்னும் விவகரித்து வருவது நாணத்தைத் தருகின்றது என்றும் ஓர் ஆசிரியர் வருந்துகின்றார்.

***

காலண்டர் வரவு:—சோப்பு, பௌடர், முதலிய வாசனைத் திரவியங்களைச் செய்பவர்களான, ஹாம்பர்க்கு ஜியார்க் டிராலி கம்பனியின், சோல் ஏஜண்டான A. V. R. A. அடைக்கப்ப செட்டியார் அவர்களது வியாபார ஸ்தலத்திலிருந்து, மேஜையில் வைத்துக்கொள்ளக்கூடிய காலண்டர் வரப்பெற்றோம். காலண்டர் பார்ப்பதற்கு அழகுடையது. தேதி குறித்துள்ள தாள்களின் பின்புறம் ஆங்கில ஆசிரியர்களின் அரியமொழிகள் பொறிக்கப் பெற்றிருக்கின்றன. இக்காலண்டரில் உள்ள படம் அழகாக இருக்கின்றது.

KALANILAYAM
Reg. No. M. 2324.

— கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.
ஆசிரியர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

பால காண்டம்	ரூ.	5	0	0
அயோத்தியா காண்டம்	,,	5	0	0
ஆரணிய காண்டம்	,,	4	0	0
கிட்கிந்தா காண்டம்	,,	4	8	0
சுந்தர காண்டம்	,,	5	0	0
யுத்த காண்டம்—2 பாகம்	,,	10	0	0

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம், சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில் எங்கள் பிரசித்திபெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

பலவிருத்தி ஒளஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 53 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனம்! ஆரோக்கிய கிரந்தம் இனம்!

ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

கற்பக மலர் (சிறு கதைகள்)
(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)
மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணா 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணா 3.
ஏழணா ஸ்டாம்புக்கு 2 புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

பாரத வசனம்

ஆதிபர்வம் 3-8-0. ஸபா, ஆரண்ய, விராட பர்வங்கள் அடங்கியது ரூபா 5-0-0. உத்தியோக, பீஷ்ம, துரோண, கர்ண சல்லிய, ஸௌப்திக பர்வங்கள் அடங்கியது 5-0-0. சாந்தி, அநுசாசனிக, அச்வமேத, ஆச்ரமவாஸ, ஸ்வர்க்காரோஹண, முசல, மஹாப்ரஸ்தானிக பர்வங்கள் அடங்கியது 5-0-0.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES LIBERAL CONDITIONS
NEW TABLES NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)